பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 24 புதன்கிழமை (07.06.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 191

# யுத்த சூழலை அரசு திணிக்கின்றது

## நோர்வேயிடம் புலிகள் நேரடியாகத் தெரிவிப்பு

- ஒஸ்லோவிலிருந்து விசேட பிரதிநிதி -

ஒஸ்லோ,ஜூன்7

**"இலங்கை அரசு மேற்கொண்டுவரும் கொலைகள், ஆள் கடத்தல், இராணுவ நெருக்குவாரங்கள், வன்செயல்கள் ஆகியவற்றை மேற்கொண்டு அதன் மூலம் யுத்த சூழலை எம்மீது திணிக்கின்றது."**

**விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவினர், சமாதான முயற்சியின் அனுசரணையாளர்களான நோர்வேத்தரப்பிடம் நேற்று இதனைத் தெரிவித்துள்ளனர்.**

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு குறித்து நாளையும் நாளைமறுதினமும் ஒஸ்லோவில் இடம்பெறும் சந்திப்பில் கலந்துகொள்வதற்காக விடுதலைப் புலிகளின் உயர்மட்டக்குழு ஒஸ்லோ வந்துசேர்ந்துள்ளது.

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் கொண்ட உயர்மட்டக்குழு நோர்வேயின் அதிகாரிகளை நேற்றுச் சந்தித்தது.

நோர்வேயின் விசேட சமாதானப் பிரதிநிதி ஹன்ஸன் போவர், சர்வதேச விவகாரங்களுக்கான அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரை உயர்மட்டக் குழுவினர் தனித்தனியாகச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

வடக்கு - கிழக்கில் தற்போது ஏற்பட்டுள்ள கள நிலைமை குறித்து அவர்களுக்கு உயர்மட்டக் குழுவினர் விளக்கிக் கூறினர்.

இச்சந்திப்புக் குறித்து தமிழ்ச்செல்வன் கூறியதாவது:-

நோர்வேயின் விசேட தூதுவர் போவர், அமைச்சர் சொல்ஹெய்ம் ஆகியோருடன் நேற்று விரிவாகப் பேச்சு நடத்தினோம்.

கள நிலைமை மற்றும் நெருக்கடி நிலைமை குறித்து விவரமாக எடுத்துக்கூறினோம்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். - பலாலி வீதியில் கிரனேட் வீச்சு

யாழ்ப்பாணம், ஜூன் 07

யாழ். - பலாலி வீதியில் - அம்மன் வீதியும், அன்னசத்திர ஒழுங்கையும் சந்திக்கும் பகுதியில் வீதிக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த படையினரை இலக்கு வைத்து நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள், படையினர் மீது கிரனேட்டை வீசிவிட்டுத் தப்பிச் சென்று விட்டனர் என்று கூறப்பட்டது.

இந்தத் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை. சம்பவத்தையடுத்து அப்பகுதியூடாகப் பயணித்த பொதுமக்கள் சிலர் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகினர் என்றும் கூறப்பட்டது.

நேற்றுப்பிற்பகல் பிறவுண் வீதியில் கலட்டிச் சந்திக்கு அருகில் உள்ள காவலரண் மீதும் கிரனேட் வீசப்பட்டது. (12-190-15-86)

## ஒஸ்லோ விமான நிலையத்தில் புலிகளுக்கு உற்சாக வரவேற்பு!

- ஒஸ்லோவிலிருந்து விசேட பிரதிநிதி -

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் பாதுகாப்பு மற்றும் செயற்பாடுகள் குறித்த சந்திப்பில் கலந்துகொள்வதற்கென நேற்று முன்தினம் ஒஸ்லோ சென்றடைந்த விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுக்கு அங்குள்ள விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் எஸ். புலித்தேவன் ஆகியோர் அடங்கிய புலிகளின் உயர் மட்டக் குழு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நோர்வே நேரப்படி இரவு 10.30 மணிக்கு ஒஸ்லோவைச் சென்றடைந்தது.

முன்னதாக கொழும்பிலிருந்து புறப்பட்டு கட்டார் விமான நிலையத்திற்குச் சென்ற புலிகளின் குழுவினர் பின்னர் அங்கிருந்து சுவிற்ஸர்லாந்தின் சூரிச் விமான நிலையத்தைச் சென்றடைந்தனர். அங்கு சிறிது நேரம் தங்கியிருந்து அவர்கள் ஊடகவியலாளர்களிடம் பேசினர். அதற்குப் பிறகு அவர்கள் அங்கிருந்து ஒஸ்லோவுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

புலிகள் குழுவினர் ஒஸ்லோ விமான நிலையத்தில் இறங்கிய போது நோர்வேயில் புலம் பெயர்ந்து வாழும் நூற்றுக் கணக்கான தமிழ் மக்கள் விமான நிலையத்தில் கூடி நின்று புலிகளின் பிரமுகர்களுக்கு உற்சாகமான வர

(12ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல்போன பூசகர் நேற்று சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம்,ஜூன்7

கோப்பாய்ப் பகுதியில் இருந்து கடந்த மாதம் 26ஆம் திகதி மாலை கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்திற்குப் பூசைக்காகச் சென்று காணாமற்போன பூசகர் நேற்று மாலை கோப்பாய்ப் பாலத்தடிப் பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

கோப்பாய் மத்தியைச் சேர்ந்த வைத்தீஸ்வரசர்மா வெங்கடகிருஷ்ணசர்மா (வயது50) என்ற பூசகரே இவ்வாறு சடலமாக மீட்கப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## 101 மணிநேர உண்ணாவிரதம் நேற்றுடன் நிறைவடைந்தது!

### திருப்தி அளிப்பதாகக் கூறுகின்றார் தயா இடைக்காடர்

இலங்கையில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து பிரித்தானிய நாடாளுமன்றம் முன்பாக லண்டன் ஹரோ நகரசபை உறுப்பினர் தயா இடைக்காடர் மேற்கொண்டு வந்த 101 மணிநேர உண்ணாவிரதப் போராட்டம் நேற்று நிறைவடைந்தது.

தமிழர் தாயகத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அரச பயங்கரவாதத்தையும், படுகொலைகளையும் கண்டித்து அதுபற்றி ஐரோப்பிய சமூகம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க

(12ஆம் பக்கம் பார்க்க)

## வேலணையில் திங்களிரவு இருவர் சுட்டுக் கொலை!

யாழ்ப்பாணம், மே 07

வேலணையில் நேற்றுமுன்தினமிரவு வீடொன்றில் வைத்து இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

வேலணை 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான கேசவன் ஆனந்தன் (வயது - 28), இரட்ணசிங்கம் போதினி (வயது - 28) ஆகிய இருவருமே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

திடீரென வீட்டுக்குள் புகுந்த இனந்தெரியாதநபர்கள் இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்று விட்டனர் என்று கூறப்பட்டது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தவர்களில் ஒருவரான இரட்ணசிங்கம் போதினி கடந்த ஏப்ரல் மாதம் 30ஆம்திகதி வேலணையில் வைத்து இனந்தெரியா தோரின் சூட்டுக்கு இலக்காகியிருந்தமையும் -

பின்னர், யாழ். வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு, சிகிச்சையின் பின்னர் வீடுதிரும்பியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கவையாகும்.

இந்த நிலையில் - நேற்றுக்காலை சம்பவ இடத்துக்குச் சென்ற ஊர்காவல்துறை நீதிவான் விசாரணை நடத்தியதுடன் பிரேத பரிசோதனைகளுக்காக சடலங்களை யாழ். வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறும் ஊர்காவல் துறை பொலீஸாருக்கு பணிப்புரை விடுத்தார்.

குறிப்பிட்ட இருவரது சடலங்களும் நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவில் யாழ். வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன. (க-15-190)

## வவுனியாவில் கிளைமோர்த் தாக்கு இரு பொலீஸார், சிவிலியன் மரணம்

வவுனியா,ஜூன்7

வவுனியா, பண்டாரிக்குளத்திற்கும் வைரவப்புளியங்குளத்திற்கும் இடையில் நேற்றுப் பிற்பகல் 3.45 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் இரு பொலீஸார் உட்பட மூவர் கொல்லப்பட்டனர்.

தற்சமயம் நடைபெற்றுவரும் ஜி.சீ.ஈ.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ராகமவில் கிளைமோர் தாக்குதல் பஸ் சாரதி, நடத்துநர் படுகாயம்!

### கடற்படை வாகனத்துக்கு இலக்கு வைக்கப்பட்டதா?

ராகம, வெலிசர கடற்படை முகாமுக்கு அருகில் நேற்றுக் காலை இடம்பெற்ற கிளைமோர் தாக்குதல் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக் காலை 4.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. வீதியோரத்தில் தூண் ஒன்றில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த கிளைமோரில், இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றே சிக்கியது.

இதில் அந்த பஸ்ஸின் சாரதியும், நடத்துநரும் படுகாயமடைந்தனர். வெலிசர கடற்படை முகாமிலிருந்து செல்லும் வாகனத் தொடரணியை இலக்கு வைத்தே இந்தக் கிளைமோர் பொருத்தப்பட்டிருக்கக் கூடுமென்று படைத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. சம்பவத்தில் காயமடைந்த இருவரும் ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை ராகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவின் பணிப்பின் பேரில் குற்றப் புலனாய்வுப் பொலிஸாரும் விசாரணை ஒன்றை ஆரம்பித்திருக்கின்றனர்.

**தேடுதல் நடவடிக்கை**

நேற்றைய இந்தத் தாக்குதல் சம்பவத்தை

(12ஆம் பக்கம் பார்க்க)

### புலிகள் மீது குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 07

ராகமவில் நேற்று இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலை விடுதலைப் புலிகளே நடத்தியிருக்கின்றனர் என்று கடற்படைப் பேச்சாளர்

(12ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஒஸ்லோ விமான நிலையத்தைச் சென்றடைந்த விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

# தேசவிடுதலையின் பின்னரே நிரந்தரக் கல்வி தமிழர் வரலாறு உணர்த்தும் பாடம் இதுவே!

## மாணவர் எழுச்சிநாள் பிரகடனத்தில் தெரிவிப்பு

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை ஒட்டி நேற்று வெளியிடப்பட்ட பிரகடனம் இது.

இன்று தமிழீழ மாணவர் எழுச்சி நாள். தமிழ் மாணவராகிய நாம் வேதனைகள், சோதனைகளுடன் கேட்ட உரிமைகளை மீட்டிப்பார்க்கும் நாளாக இந்நாளைக் கருதுகின்றோம். சிங்கள தேசத்தினால் இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டு கொதித்தெழுந்த பொன். சிவகுமார் அதற்காகவே போராடித் தன்னுயிர் ஈந்தார். இவரின் புரட்சிகரமான சிந்தனையை மதித்த எமது தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் இவர் ஈகச் சாவடைந்த நாளை தமிழீழ மாணவர் எழுச்சி நாளாகப் பிரகடனப்படுத்தினார். எமது விடுதலைப் போராட்டம் வீறுநடை போட்டு வளர்ச்சி கண்டபோது மக்கள் விடுதலையின் பால் ஈர்க்கப்பட்டு எழுச்சிகொண்டு தேசியத் தலைமையின் பின்னால் ஒன்று திரண்டனர். அந்தவேளையில் மாணவர்களும் போராட்டத்தின் அவசியத்தினைப் புரிந்து கொண்டு எழுச்சியடைந்து விடுதலைப் போராட்டத்தினை பலப்படுத்த வேண்டுமென்ற தேசியத் தலைவரின் சிந்தனைக்கு மாவீரர் மேஜர் முரளி அவர்கள் தமிழீழ மாணவர் அமைப்பின் பொறுப்பாளராக இருந்து செயற்பட்டு அதனூடாகத் தலைவரின் சிந்தனைக்குச் செயல்வடிவம் கொடுத்தார்.

இன்றைய இப்புரட்சிகரமான நாளில் சர்வ தேசத்துக்கும் சிங்கள மாணவர்களுக்கும் எமது செய்தியினைச் சமர்ப்பிக்கின்றோம். தமிழீழ தேசத்தின் பண்பாட்டு விழுமியத்தினை உயர்த்துவது கல்வியாகும். சிங்களப் பேரினவாதம் இதனைத் தெளிவாக உணர்ந்த காரணத்தினாற்றான் தமிழ் மாணவர்களது கல்வியை சுட்டெரிப்பதில் அன்று முதல் இன்று வரை தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது.

**தமிழர் கல்வி மீதான கொடூரச் செயல்கள்**

தரப்படுத்தலில் தமிழ் மாணவர் உயர்கல்வி பறிக்கப்பட்டது முதல் மாணவர்கொலை, ஆசிரியர்கொலை, பள்ளிகளைக் குண்டுவீசித் தகர்ப்பு, பள்ளிகளை இராணுவமுகாமாக்கல், பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்களை இம்சைப்படுத்தல் என்று அராஜகங்களை அடுக்கிக் கொண்டே செல்லலாம். இத்தனையையும் உடைத்து உலகம் புகழும் கல்விமானாக ஒரு தமிழன் வந்து விடில் அவனையும் அழிப்பதற்கு அரசு தவறவில்லை. இவ்வாறான அரச அடக்குமுறைகளை உடைத்து எங்கள் தேசத்துக்கு சுதந்திரத்தைப் பெறுவதன் மூலமே தமிழீழத்தில் கல்வி நிரந்தரமாகும் என்பதை இன்று தெளிவாக உணர்ந்துகொண்டோம். அடம்பன் கொடியாகத் திரண்டு தேசியத் தலைமையுடன் இணைந்து எதிரிக்கு களத்தில் நின்று பதில்சொல்ல அனைவரும் ஆயத்தமென்ற அரிய செய்தியை இந்நாள் செய்தியாகத் தமிழீழ மாணவர்களாகிய நாம் தெளிவாகக் கூறுகின்றோம்.

21ஆம் நூற்றாண்டில் உலகின் கல்வி விண்வெளியில் தேடல்களைச் செய்து கொண்டிருக்கிறது. அங்கு மாணவர் பரம்பரை அதி நவீன ஆய்வு கூடங்களிலும் கணனி அறைகளிலும் இணையத்தளங்களிலும் தேடலை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார்கள். இதைத் தழுவி சிங்கள மாணவர்களின் வாழ்வியலிலும் நவீனத்தைப் புகுத்த சிங்கள அரசு பகீரத முயற்சி மேற்கொள்கின்றது. மாறாக, எங்கள் தேசத்தில் கூரை இல்லாப் பள்ளிகளும் உடைந்த பள்ளிகளுமே இன்று வரை கற்பித்தலை வழங்கும் கோயிலாக இருந்து வருகின்றன.

பாடசாலையில் அமைந்த மரங்களும் பதுங்குகுழிகளும் எம் மாணவர் துன்பத்தை என்றும் கூறும். பாடப்புத்தகத் தட்டுப்பாடும் - அதிலும் தமிழர் பண்பாடு, வரலாறுகளை திட்டமிட்டு இருட்டடிப்பு அல்லது திரிபுபடுத்தும் பாடப் புத்தகங்கள் - ஆசிரியர் தட்டுப்பாடு என்று மாணவர்கள் உரிமைகள் யாவும் எதிரியிடும் பிச்சையாகவே இருந்துவருகின்றது. மேலாக தமிழ் மாணவர் உளவியலை கற்றலுக்கு முரணாக்குவதிலும் அரசு திட்டமிட்டுச் செயற்படுத்துகிறது. கைதுகள், கொலைகள், இடம்பெயர்வுகள் மூலம் தமிழ் மாணவர் உள்ளங்களைச் சிதைப்பதில் அரசு பாரிய முனைப்புக்காட்டி வருகிறது. தமிழ் மாணவரின் உயர்கல்வி வாய்ப்பில் புறக்கணிப்பு, உத்தியோகத்தில் புறக்கணிப்பு, பௌதிக வளப் பயன்பாட்டில் புறக்கணிப்பு என்று அரசின் திட்டமிட்ட நாசகாரங்கள் சமாதானக் காலத்திலும் துளியளவு கூடக் குறையவில்லையென்பதற்கு சர்வதேச புள்ளிவிபரங்கள் சாட்சிகளாக உள்ளன. இவற்றிற்கு உச்சமாக இராணுவம் பல்கலைக் கழகத்தினுள் நுழைவதும் துணைவேந்தர், விரிவுரையாளர்களைத் தாக்குவதும் கண்ட படி மாணவர்களைப் படுகொலைசெய்வதும் மாவட்ட ரீதியான உயர்கல்வி வாய்ப்புக்களைப் பறித்து சிங்கள மாணவர்களுக்குக் கொடுப்பதும் இன்று அரசிடம் கூர்ப்புப் பெற்றிருப்பதைக் காண முடிகின்றது.

**தேசியத் தலைவரின் கல்வி பற்றிய சிந்தனை**

இந்த அனைத்தையும் நோக்கும் போது கல்விப்புலத்துக்குள்ளால் வளர்ந்த தமிழீழ விடுதலைப் போரை தமிழ்க் கல்வியை அழித்தே அழிக்க வேண்டும் என்பதில் எதிரி அசையாத முடிவு எடுத்துவிட்டான் என்பதை உணர முடிகிறது. இந்தவேளையில் எங்கள் தேசியத் தலைவரின் சிந்தனைதான் எமக்கு முன்னால் வந்து நிற்கிறது. அதாவது...

''கல்வி போராட்டத்திற்குக் கவசம்
போராட்டம் கல்விக்குக் காப்பரண்''

இந்த தேசிய சிந்தனையைத்தவிர எங்கள் கல்விக்கு வாழும் வழி ஏதுமில்லை. நாம் எங்கள் கூட்டுப் பலத்தைக் காட்டத் தவறின் எம் கல்வி சாம்பலாவது நிச்சயம். எங்கள் கல்வி அழிகிறது என்று இனியும் ஓலமிடாமல் எம் கல்வியை அழிக்கும் இனவாதத்தீயை அணைக்க வேண்டும். அதற்கு உதவுவார் என்ற மேற்குலக நாடுகளும் ஊனப்பட்டு விட்டார்கள். அவர்களின் பார்வையை இனவாதத்தீ மறைத்து விட்டது. அதனால் இரத்த வெள்ளத்தில் ஓலமிடும் எங்கள் மாணவர் குரல் அவர்கள் காதுகளில் கேட்கவில்லை. தொங்கிக் கொண்டிருக்கும் பாடசாலைச் சுவர்களின் அவலம் மேற்குலகத்துக்குப் புரியவில்லை. அப்படியானால் எங்கள் கல்வி வாழ இருக்கும் வழி 'சுதந்திரம்.'

அது தேசச் சுதந்திரம்! அப்போதுதான் எங்கள் கல்வி நிரந்தர கல்வியாக மாறும்.

அன்பான எம் சகோதரர்களே!

ஆண்டாண்டு காலம் எம்கல்வி அழிந்து செல்கிறது. அழிவுக்குக் காரணமானவர்களை நாம் அழிக்கத் தவறினால் ஆண்ட எங்கள் இனம் மாண்டு போய்விடும். அன்று அரசசபையில் அரியணையில் வீற்றிருந்த தமிழ்மொழி அழிந்து போய்விடும். காவியங்களுக்குக் கதை சொன்ன எங்கள் பண்பாடு காற்றாய் மறைந்து போய்விடும். இதைத் தெளிவாக உணரவைக்கும் கல்விக்கு விலங்குடைக்க வேண்டுமானால் அது கல்வி கற்கும் பரம்பரையில் தான் தங்கி உள்ளது. ஆதலால் தமிழீழ மாணவர்களாகிய நாம் இன்று தேசச் சுதந்திரத்திற்குப் பின்னர்தான் நிரந்தரக் கல்வி என்று உறுதி எடுத்துக்கொள்கிறோம். கல்விப் புலத்தின்வழி உருவாகி எம் கல்விக்கு கட்டுமானம் அமைத்த தேசியத் தலைவரின் கரத்துக்கு உரங்கொடுப்போம்.





வன்னியில் நேற்று நடந்த தமிழீழ மாணவர் எழுச்சி நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

## தமிழ் யுவதியின் மரணத்தால் கொதிப்பு

# சிறைக்குள் கைதிகள் உண்ணாவிரதம் வெளியில் உறவினர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூன் 7

நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் யுவதி ஒருவர் உயிரிழந்தமைக்கு சிறைச்சாலை அதிகாரிகளின் அசமந்தப் போக்கே காரணம் என்று குற்றஞ் சாட்டி, அதற்குக் கண்டனம் தெரிவித்தும் - இது தொடர்பாக நீதியான விசாரணைகளை நடத்துமாறு வற்புறுத்தியும் - குடிவரவு குடியகல்வுச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய கைதிகள் தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

நேற்று முன்தினம் ஆரம்பமான அவர்களது போராட்டம் இரண்டாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

கைதிகளின் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த அவர்களின் பெற்றோர், உறவினர்கள் இன்று காலை 9 மணிக்கு நீர்கொழும்பு சிறைச்சாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றையும் நடத்தவிருக்கின்றனர்.

தமது பிள்ளைகள், உறவுகளின் விசாரணைகளைத் துரிதப்படுத்தி அவர்களை உடனடியாக விடுவிக்கவேண்டும் என்று கைதிகளின் பெற்றோர் உறவினர்களும் கோரிக்கை விடுக்கவிருக்கின்றனர்.

சிறை அதிகாரிகளின் அசமந்தப் போக்குக் குறித்து நீதியான விசாரணைகள் நடத்தப்படும் வரை உண்ணாவிரதப் போராட்டம் தொடருமென்று கைதிகள் சிறைச்சாலை நிர்வாகத்திற்கு அறிவித்திருக்கின்றனர். உண்ணாவிரதமிருக்கும் பெண்கைதிகளில் கர்ப்பிணி ஒருவரும் அடங்குகிறார் எனக் கூறப்படுகிறது. பெண் கைதிகளில் இருவர் மயக்கமடைந்து நேற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இதற்கிடையில் ஆஸ்துமா நோயின் தாக்கம் அதிகரித்து உயிரிழந்த யாழ்ப்பாணம், உரும்பிராயைச் சேர்ந்த இளம் பெண்ணின் உடல் நேற்றுப் பிற்பகல் அவரின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## நாட்டுப்பற்றாளர் கௌரவம்

வெவ்வேறு சம்பவங்களில் உயிரிழந்த இருவருக்கு நாட்டுப்பற்றாளர் கௌரவம் வழங்கப்பட்டுள்ளது என தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். கடந்த ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி வவுனியா நெலுக்குளம் பகுதியில் சுகயீனம் காரணமாக உயிரிழந்த நாலாம் கட்டை, பம்பைமடு வவுனியாவை பழைய முகவரியாகவும், கற்பகபுரம் வவுனியாவை தற்போதைய முகவரியாகவும் கொண்ட மணியம் (முத்துக்குமார் மணியம்) என்பவருக்கும்-

கடந்த ஏப்ரல் 26ஆம் திகதி முதலாம் குறுக்குத்தெரு, வவுனியாவில் வர்த்தக நிலையம் ஒன்றில் வைத்து இராணுவப் புலனாய்வாளரால் சுடப்பட்டதில் உயிரிழந்த சூசைப்பிள்ளையார்குளம் வவுனியாவைப் பழைய முகவரியாகவும் முதலாம் குறுக்குத்தெரு வவுனியாவை தற்போதைய முகவரியாகவும் கொண்ட செந்தில்நாதன் (ஆறுமுகம் செந்தில்நாதன்) என்பவருக்கும் நாட்டுப்பற்றாளர் கௌரவம் வழங்கப்பட்டுள்ளது என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

# வன்முறை மூலங்களைக் கண்டறிய சர்வதேசக் குழு அவசியமானதுதான்

இலங்கையில் நடக்கும் வன்முறைகள் குறித்து விசாரணைகளை நடத்துவதற்கு சர்வதேசக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டியது அவசியம்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆஸ்திரேலிய இணைப்பாளர் ரொபின் கில் பற்றிக் அம்மையார் இவ்வாறு வலியுறுத்தியிருக்கின்றார்.

தமது கோரிக்கைக்குக் காரணமான நியாயங்களையும் கூட அவர் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

இலங்கைத் தீவில் பரவலாக இடம்பெறும் வன்முறைகள், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், புத்திஜீவிகள், பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள் போன்றோர் மீதான தாக்குதல்கள், ஆட்கள் காணாமல் போகும் சம்பவங்கள், மனித உரிமை ஆணைக் குழுவுக்கான நியமனங்களில் கூட ஜனாதிபதி மஹிந்தரின் அரசு வெளிப்படுத்தும் அரசியல் ஆதிக்கம், தொடர்ந்து நீடிக்கும் உக்கிரமற்ற யுத்தம் ஆகியவற்றை அவர் வரிசைப்படுத்தியிருக்கின்றார்.

கடந்த ஆறு மாதங்களில் அப்பாவிப் பொதுமக்கள் உட்பட அறுநூறு பேர் வரை அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர். கடந்த ஒரு மாதகாலத்தில் மட்டும் இருநூறு பொதுமக்கள்வரை கொலையுண்டுள்ளனர். கிழக்கில் இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். மனித உரிமை மீறல்கள் பெரும் எடுப்பில் இடம்பெறுகின்றன என்று அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

இது தவிரவும், தனது மக்கள் என்று தான் உரிமை கொண்டாடும் குடிசனங்களின் பிரதேசங்கள் மீதே கண்மூடித்தனமான விமானக் குண்டு வீச்சுக்களை நடத்தி, அப்பாவி மக்களை அரசே கொன்றொழிக்கும் கைங்கரியமும் இங்குதான் நடக்கின்றது.

பொதுமக்களுக்கு அவசியமான - அத்தியாவசியமான - பொருள்களைக் கூட தமிழர் பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்ல தடைவிதிக்கும் உரிமை மீறல்கள் உத்தியோக பூர்வமாகவே இங்கு நிகழுகின்றன.

அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி தமிழர் தாயகப் பிரதேசத்துக்கான அத்தியாவசியப் பொருள் விநியோகம் தங்கு தடையின்றி இடம்பெறுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஆனால், தமிழர் தாயகத்துக்கான முக்கிய கட்டுமானப் பொருட்களை உத்தியோகபூர்வமாகவே தடைசெய்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அப்பட்டமாக மீறுகின்றது இலங்கை அரசு.

போதாக்குறைக்கு தமிழர் தாயகத்தில் தொடர்ந்து இடம்பெறும் பல வன்முறைகளுக்கு - படுகொலைகளுக்கு - அரசு ஆதரவுத் துணைப் படைகள் மீது குற்றம் சுமத்தப்படுகின்றது.

அரசுப் படைகளின் புலனாய்வுப் பிரிவுகளின் வழிகாட்டலில் இயங்கும் துணைப் படைகள், அரசில் இடம் பெற்றிருக்கும் தமிழர் ஆயுதக் குழுக்கள் போன்றவையே இந்த வன்முறைகளுக்குக் காரணம் என்பதை இணைத் தலைமை நாடுகள், ஐரோப்பிய ஒன்றியம் போன்றவையும் சர்வதேச மன்னிப்புச் சபை, ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பு போன்ற சர்வதேச நிறுவனங்களும் அம்பலப்படுத்தி புட்டுக் காட்டியுள்ளன.

ஆனால், துணைப் படைகளே இல்லை என்று ஒரேயடியாகச் சாதிக்கின்றது அரசு.

"அரசு ஆதரவுக் குழுக்களால் - அரச படைத் தரப்பின் ஆதரவில் - வன்முறைகள் முன்னெடுக்கப்படுகின்றனவா? அப்படி நடந்தால் சாட்சிகள், சான்றுகள், ஆதாரங்கள் போன்றவற்றைக் காட்டுங்கள். நடவடிக்கை எடுக்கிறேன்." - என்று சாட்டு - சாக்குப் போக்கு - கூறி சமாளிக்கிறார் அரசுத் தலைவர்.


சுமார் ஐம்பதினாயிரம் துருப்புகளின் ஆக்கிரமிப்புப் பிடிக்குள் துவண்டு கிடக்கிறது யாழ். குடாநாடு. அதில் கூட மூன்றில் ஒரு பங்கு பிரதேசம் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் குடிமக்கள் துரத்தப்பட்டு, படைத் தரப்பின் முழு ஆக்கிரமிப்புக்குள் சிக்குண்டுள்ளது. திரும்பிய பக்கம் எல்லாம் சீருடையினர். அதற்குள்தான் அப்பாவிப் பொதுமக்கள் மீதான அடாவடித்தனமான வன்முறைகள், படுகொலைகள். அவற்றுக்குக் காரணமான கைக்கூலிகளைப் பிடிப்பதற்கு பொதுமக்களிடமே சான்றுகள், ஆதாரங்கள், சாட்சியங்களைக் கையாலாகாத் தனத்துடன் கோருகின்றது இந்த அரச நிர்வாகம்.

"ஆதாரங்களைக் காட்டுங்கள். குற்றம் புரிந்தோர் மீது நடவடிக்கை எடுக்கிறோம்." - என்று கோருவது கடலில் கப்பல் போன வழித் தடத்தைக் காட்டுங்கள் என்ற கேள்விக்கு ஒப்பானது.

பொது மக்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்க லாயக்கற்ற அரசுத் தலைமை, தான் பொறுப்பிலிருந்து தப்புவதற்காகக் கூறும் இந்த சமாளிப்பு வேலை, சம்பந்தப்பட்ட வன்முறை மூலங்களை - காரணகர்த்தாக்களை - மேலும் வன்முறை புரிவதற்கு ஊக்குவிப்பதாகவும், தூண்டுவதாகவும் அமையும் என்பதும் கவனிக்கத்தக்கது.

அரசுத் தலைமையிலிருந்து அடிப்படை மட்டத்தில் சிப்பாய்கள் வரை புரியும் இத்தகைய தவறுகளை - பொறுப்பற்ற செயல்களை - போக்குகளை - குற்றங்களை - சர்வதேச சமூகத்தின் முன் அம்பலப்படுத்துவதாயின் -

சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆஸ்திரேலிய இணைப்பாளர் கோருகின்றமை போல, இலங்கை வன்முறைகளை விசாரிப்பதற்கான சர்வதேசக் குழு அமைக்கப்படுவது அவசியமானதுதான்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்ற மாணவர் எழுச்சிநாள் நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. தமிழீழத் தேசியக்கொடியை விவசாயபீட மாணவர் ஒன்றியப் பிரதிநிதி ஏற்றுவதை முதல்படத்திலும், திருவுருவப் படத்திற்கான பொதுச்சுடரினை பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல் ஏற்றுவதையும் ஈகச்சுடரினை பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் எஸ்.கந்தசாமி ஏற்றுவதையும், மலர் மாலையை சமூகவியல் துறைப் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் அணிவிப்பதையும், மலரஞ்சலியை ஆசிரியர் சங்கச் செயலாளர் எஸ். ஆழ்வாப்பிள்ளை செலுத்துவதையும், படங்களிலும் காணலாம்.
(படங்கள்: இனியன், நேசன்)

# மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகள் நேற்று பல்கலையில் உணர்வுபூர்வமாக நடந்தேறின

யாழ்ப்பாணம், ஜூன்7

தமிழின விடுதலைக்காய் முதன் முதலில் வீரச்சாவடைந்த தியாகி பொன். சிவகுமாரனின் 32 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வும் மாணவர் எழுச்சி நாள் நிகழ்வும் நேற்று முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்க முன்றிலில் அமைந்துள்ள மாவீரர் நினைவுத் தூபிப் பகுதியில் உணர்வுபூர்வமாக நடைபெற்றன.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். விஜயரூபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச் சுடரினை யாழ். பல்கலைக் கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் ஆர். குமாரவடிவேலும் தமிழீழத் தேசியக்கொடியை யாழ். பல்கலைக் கழக விவசாயபீட மாணவர் ஒன்றியப் பிரதிநிதியும் ஏற்றிவைத்தனர்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து தியாகி பொன். சிவகுமாரனின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை யாழ். பல்கலைக்கழக பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி போராசிரியர் எஸ். கந்தசாமி ஏற்றிவைக்க திருவுருவப் படத்திற்கான மலர்மாலையை யாழ். பல்கலைக்கழக சமூகவியல்துறைப் பேராசிரியர் என். சண்முகலிங்கன் அணிவித்தார்.

தொடர்ந்து மலர் அஞ்சலியை யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கச் செயலாளர் எஸ். ஆழ்வார்ப்பிள்ளை ஆரம்பித்து வைத்தார்.

மலரஞ்சலியைத் தொடர்ந்து தலைமையுரை இடம்பெற்றது.

தொடர்ந்து நினைவுரைகளை யாழ். பல்கலைக்கழக ஊழியர்சங்கத் தலைவர் கலாராஜ், யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் ஆகியோர் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து தேசியக் கொடி இறக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக் கழக பேராசிரியர்கள், கல்விசார ஊழியர்கள், அனைத்துப்பீட மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(12-190-86-111)

# பொதுமக்களின் படைக்கட்டுமானங்கள்தான் தமிழீழத்தின் இறுதி வெற்றியைத் தீர்மானிக்கும்

## பயிற்சி நிறைவு விழாவில் கேணல் சூசை பேச்சு



தமிழீழத்திற்கான இறுதி வெற்றியைத் தீர்மானிக்கப்போகின்ற செயற்பாடுதான் இன்றைய மக்கள் படைக் கட்டுமானம் என கடற் புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்துள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டரங்கில் நடைபெற்ற தமிழீழ மக்கள் படைக் கட்டுமானப் பயிற்சியின் முதற் கட்டப் பயிற்சி நிறைவு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பத்து நாட்களுக்கு மேலாக சகல வேலைகளையும் புறந்தள்ளிவைத்து ஒரு பயிற்சியில் ஈடுபட்ட மக்கள் இன்று முதற்கட்டப் பயிற்சியினை நிறைவு செய்துள்ளனர். இன்று இங்கு காணுகின்ற எழுச்சிதான் தமிழீழத்திற்கான இறுதி வெற்றியை தீர்மானிக்கப்போகின்றது.

உண்மையில் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையினை மேற்கொண்ட காலத்தில் வன்னிக்குள் இருந்த மூன்று இலட்சம் மக்களுள் இருந்துதான் விடுதலைப் போராட்டத்தின் யுத்திகள் மேற்கொள்ளப்பட்டன. பத்தாயிரம் எல்லைப் படை வீரர்கள் எமக்கு தோள்கொடுத்தனர். இதில் 280வரையான எல்லைப் படைமாவீரர்களின் தியாகத்தினால் ஒரு பெருமளவு தேசம் எங்களால் மீட்கப்பட்டது.

இன்று ஆட்சியிலுள்ள மஹிந்த எமது நிலத்தைக் கைப்பற்றிக்கொள்ளலாம் என்று கனவு காணுகின்றார். வடக்கிலும் கிழக்கிலும் நாளுக்கு நாள் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுகின்றார்கள். ஜெனிவாப் பேச்சுக்கு பின்னர் 200இற்கும் அதிகமான மக்கள் படுகொலை செயயப்பட்டுள்ளனர். தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகள் உள்ளனர். இந்திய ஆக்கிரமிப்புக் காலத்தில் 2000 வரையான புலிகள் மாத்திரமே போரிட்டனர். ஆனால் இன்று பல்லாயிரம் புலிகளும் அதற்கு பக்க பலமாக பல இலட்சம் தமிழ் மக்களும் உள்ளனர். இராணுவ ஆக்கிரமிப்பை செயவதற்கு ஸ்ரீலங்காவிற்கு சர்வதேசம் அங்கிகாரம் வழங்கியுள்ளது என்று தெரிவித்தார். (க)

# தென்மராட்சி கல்வி வலயத்தில் 11 ஆரம்ப பாடசாலைகள் புனரமைப்பு

## 'யுனிசெவ்' அமைப்பின் நிதியுதவியுடன்

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த பதினொரு பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு வகுப்பறைகள் புனரமைக்கப்படவுள்ளன.

புனரமைப்புப் பணிகளுக்கான நிதியினை 'யுனிசெப்' நிறுவனத்தினர் வழங்கவுள்ளனர்.

கைதடி குருசாமி வித்தியாலயம், இயற்றாலை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை, அல்லாரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம், மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம், கொடிகாமம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, கைதடி-நுணாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, குடமியன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, போக்கட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, மட்டுவில் சாந்த நாயகி வித்தியாலயம், கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு வகுப்பறைகளே புனரமைக்கப்படவுள்ளன. (117)

# பரீட்சைத் திணைக்கள உயர் அதிகாரிகள் உயர்தரப் பரீட்சை நிலையங்களுக்கு விஜயம்

அச்சுவேலி, ஜூன்7

யாழ்.மாவட்டத்தில் ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சை நடைபெறும் பரீட்சை நிலையங்களுக்கு பரீட்சைத் திணைக்கள உயர் அதிகாரிகள் திடீர் விஜயம் செய்து நிலைமைகளை அவதானித்து பரீட்சைக் கடமைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்குகின்றனர்.

பிரதிப் பரீட்சை ஆணையாளர் ஆ.சிவலிங்கம் இந்தவாரம் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்து பரீட்சை நிலையங்களுக்கு திடீர் விஜயம் செய்து வருகின்றார்.

கடந்த வாரம் உதவிப் பரீட்சை ஆணையாளர் ஏ.சொலமன் தலைமையிலான குழுவும் யாழ்.மாவட்டத்திற்கு விஜயம்செய்து பரீட்சை நிலையங்களைப் பார்வையிட்டு ஆலோசனை வழங்கியது குறிப்பிடத்தக்கது. (11)

**நாளை**

**வைகாசி - 25**
**வியாழக்கிழமை**
**08.06.2006**
**திதி : துவாதசி**
**பின்னிரவு : 12.06**
**நட்சத்திரம் : சுவாதி**
**பின்னிரவு : 04.20**
**சுபநேரம் : 07.22-08.52**
**ராகுகாலம் : 01.22-02.52**

**உதயவாக்கு**

**எல்லோரும் அளவற்ற பணக்காரனாக இருக்க அதிர்ஷ்டம் தேவை என்கிறார்கள். அறிவாளியாக இருக்க அதிர்ஷ்டம் தேவை என்பதை யாராவது உணர்ந்திருக்கிறார்களா?** *-யூதப் பழமொழி.*

## குழாய்க்கிணறு விவரம் சேகரிக்கப் பணிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்7

யாழ்.குடாநாட்டில் உள்ள பொதுக் குழாய்க் கிணறுகளின் விவரம் மற்றும் அவற்றினால் மக்களுக்கு ஏற்படும் நன்மை குறித்தும் ஆராயப்படவுள்ளது.

யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் இதற்கான நடவடிக்கை எடுத்துள்ளார்.

மாவட்ட மட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்ற பிரிவிற்குள் சபையினால் பராமரிக்கப்படுகின்ற அல்லது பராமரிக்கப்படவுள்ள பொது குழாய்க் கிணறுகளின் விவரங்களைத் தயாரித்து எதிர் வரும் 9ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு சகல செயலாளர்களையும் அவர் கேட்டுள்ளார்.

மேலும் உள்ளூராட்சி மன்றப் பிரிவிற்குள் குழாய்க் கிணறு அமைந்துள்ள இடத்தின் முகவரி, குழாய்க்கிணறு பயன்படுத்தப்படுகின்றதா? அல்லது பழுதடைந்துள்ளதா எனவும் -

குழாய்க் கிணறுகளின் பாவனையாளர்களின் தொகையும் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### கோழிக்குஞ்சு விற்பனை

ஒரு மாதம் நிரம்பிய Original Prima பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (சி/49535)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி/49481)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான பகிரா புறொயிலர் குஞ்சுகள் 07.06.2006 மாலை விநியோகிக்கப்படும். றாஜீவ் - ஆனைக்கோட்டைச்சந்தி, தாரகை- ஸ்ரான்லி றோட், P.ரவி - சாவகச்சேரி, றாஜீவ் கால்நடைத்தீவன விற்பனை நிலையம்-மாதகல் வீதி, பண்டத்தரிப்பு. T.P.: 222 2867, 222 3529 (50632)

### தவறிவிட்டது

K.K.S. றோட், தாவடி என்ற முகவரியை உடைய முத்துலிங்கம் நித்தியானந்தா என்பவரின் விசேட அடையாள அட்டை, பாடசாலை அ.அட்டை என்பன யாழ்ப்பாணத்திற்கும் இணுவில் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் T.P இலக்கத்துடன் தொடர்புகொள்ளவு். தகுந்த சன்மானம் வழங்கப்படும். T.P. 0776027058, 077 9152359 (50905)

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லக்கினத்தில் செவ்வாய், ராகு, கிரக பாவம் 51, 1971ஆம் ஆண்டு பிறந்த, 5' 2'' உயரமுள்ள மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. தொடர்பு: T.P.: 077 9591292, 001 613 4400039 (கனடா). (50910)

### வகுப்புகள்

A/L தமிழ்/வரலாறு ஆகிய பாடங்களும் புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்களுக்கும் தனியாகவோ, குழுவாகவோ கற்றுக்கொடுக்கப்படும்.
தொடர்புகளிற்கு : 077 9898599 (50919)

### மணமக்கள் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1965இல் பிறந்த, லண்டன் பிரஜாவுரிமை, பூராடம், செவ்வாய்க்குற்றமற்ற, கிரகபாவம் 7¼ உடைய மணமகனுக்கு மணமகள் தேவை. மற்றும் றோமன் கத்தோலிக்க கௌரவ குடும்பங்களில் 73, 75, 76ஆம் ஆண்டுகளில் பிறந்த, பட்டதாரி ஆசிரியர்கள் பலர் எம்மிடம் உண்டு. நேரில் வரவும். யோசேப், மாரீசன் கூடல், இளவாலை. 077 9672462 (50911)

## பெருந்திருவிழாக்கள்

வடமராட்சி,ஜூன்7

கரணவாய் உச்சில் அருள்மிகு புவனேஸ்வரி அம்மன் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் சனிக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவம் இடம்பெறவிருக்கின்றது.

(173)

★ ★ ★

வடமராட்சி,ஜூன்7

கப்புது அந்தணன் திடல் காட்டுக் கந்தசுவாமி கோயில் வருடாந்த பெருந்திருவிழா கடந்த 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (173)

## தாதியர் நேர்முகப் பரீட்சை: தோற்றாதவர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம், ஜூன்7

யாழ். போதனா வைத்தியசாலையின் தாதியர் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சைக்கு இதுவரை தோற்றாதவர்களுக்கான நேர்முகப் பரீட்சை யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் அலுவலகத்தில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும். இதுவரை சமுகமளிக்காதோரை வருகை தருமாறு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(202)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 02 - 05 - 1980

மறைவு 08 - 05 - 2006



## செல்வி கந்தசாமி நித்தியகல்யாணி

(பல்கலைக்கழக, கலைப்பீட இறுதிவருட மாணவி)

புலன்கள் எல்லாம் மங்கிப்போக ஏங்கி நிற்கிறோம்
உண்மையா? இது உண்மையா?
இப்படி திடீரென்று ஒவ்வொரு நெஞ்சையும்
ஏங்க வைத்துவிட்டு நெடுந்தூரம் சென்றதேன்
பெற்றோர்கள் உம்மை இழந்து பெருந்தவிப்புத் தவிக்கின்றார்கள்
உற்றார்கள் உம்மைக் காண உதிரம் தான் வடிக்கிறார்கள் - உம்முடன்
பழகியோர்கள் உம்மையெண்ணிக் கதறி அழுகின்றார்கள்
பற்றுடன் பழகி பாதியிலே எமைவிட்டு எங்குசென்றீர்
எண்ணி எண்ணியே நாம் ஏங்கித் தவித்து
கண்ணீரால் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

மகாத்மா வீதி, அளவெட்டியைச் சேர்ந்த செல்வி கந்தசாமி நித்தியகல்யாணி கடந்த 08.05.2006 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த செய்தி அறிந்து, நேரிலும் தொலைபேசி மூலமும் தந்தி மூலமும் ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும் மற்றும் உதவிகள் புரிந்த உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (07.06.2006) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துசிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மகாத்மா வீதி,
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.
தொ.பே. 0776510195 (50914)(32-14-11)

-குடும்பத்தினர்.

IIS IIS IIS IIS IIS

# IIS COMPUTER COURSES

A/L 2006 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே !

உங்கள் பரீட்சை முடிவுகள் வெளியாகும் வரையுள்ள பொன்னான காலத்தை
IIS இல் இணைந்து பயனுள்ளதாக்குங்கள்

சர்வதேச அங்கீகாரம் பெற்ற கணனிநிறுவனம் ஒன்றின் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஓர் அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்

New Batches Start on :

Batch 1 [ Weekday ] : 23.06.2006
Batch 2 [ Weekend ] : 01.07. 2006
Batch 3 [ Weekday ] : 10.07. 2006
Batch 4 [ Weekend ] : 23.07. 2006
at 09.30 A.M.

Diploma Courses

- Diploma in MS Office
- Diploma in Desk Top Publishing
- Diploma in Internet Technology
- Diploma in Hardware Technology
- Diploma in Computer Programming
- Diploma in Eng. Drawing & AutoCAD

சிறப்புக் கட்டணச் சலுகையில் கணனிக் கற்கைநெறிகள்
சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!!

கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்

INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)
# 100, Clock Tower Road, Jaffna
Tel : 021 222 2831 Fax : 021 222 6933 Email : iiscc@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வல்வை. நெடியகாட்டு இளைஞர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வல்வை. மாவட்ட வைத்திய சாலையில் இரத்ததானம் செய்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. யாழ்.போதனா வைத்தியசாலையில் இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி டாக்டர் இ.சிவசங்கர் இரத்தக் கொடையாளர்களைப் பரிசோதனை செய்வதையும், தாதி ஒருவர் இரத்தக் கொடையாளர் ஒருவரிடம் இரத்தம் எடுப்பதையும், இரத்தக் கொடையாளர்கள், யாழ்.இரத்த வங்கி அதிகாரிகள் ஆகியோரையும் படங்களில் காணலாம். (படங்கள்: கரவெட்டிச் செய்தியாளர்)

## கொடிவாரம்

தென்மராட்சி, ஜூன்7

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஊனமுற்றோர் கொடிவாரம் அனுஷ்டிக்கப்படுகிறது.

பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வீடு வீடாகச் சென்று கொடி விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிரதேச சமுர்த்தி உத்தியோகத்தர்களால் வருடா வருடம் கொடிவாரம் மூலம் திரட்டப்படும் நிதி பிரதேசத்தில் உள்ள ஊனமுற்றோரின் அபிவிருத்தி நலன்களுக்கு வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (117)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்7

வை.எம்.சி.ஏ. ஸ்தாபகர் தினம் நேற்றாகும். இதனை முன்னிட்டு யாழ். வை.எம்.சி.ஏ. நேற்றுத் தொடக்கம் எதிர்வரும் 11ஆம் திகதி வரை கொடிவாரம் அனுஷ்டிக்கிறது. (190)

## சமய சந்நிதி

வடமராட்சி,ஜூன்7

புலோலி வடமேற்கு (மந்திகை) வில்லிபாதி முருகன் கோயில் புனராவர்த்தன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 6.25 மணிக்கும் 8.25 மணிக்கும் இடையிலான சுபவேளையில் நடைபெறும்.

கிரியா கிரம ஜோதி சிவஸ்ரீ உலகயோகேஸ்வரக்குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார்.

முருகப்பெருமானுக்கும் மற்றும் விநாயகர், வைரவர் மூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து மண்டலாபிஷேகம் இடம்பெறும். (175)

# கல்லுண்டாயில் புதிய கொல்களம் பிரதேச மக்கள் அதிருப்தி தெரிவிப்பு

நவாலி,ஜூன்7

ஆனைக்கோட்டை கல்லுண்டாயில் மாடு வெட்டுவதற்கென புதிதாக கொல்களம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கல்லுண்டாய் வைரவர் ஆலயம், சிவன் அம்மன் ஆலயம் என்பன அமைந்துள்ள பிரதேசத்தில் இந்தப் புதிய கொல்களம் நிறுவப்பட்டுள்ளது. இது குறித்து, மேற்படி பிரதேச இந்துக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் இது சம்பந்தமாக ஆனைக்கோட்டை விநாயகர் சனசமூக நிலையம், நவாலி கிழக்கு கிராம அபிவிருத்தி சங்கம் மற்றும் ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் ஆகியோர் இந்த கொல்களத்தை உடன் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு மகஜர்களை அனுப்பி வைத்துள்ளனர். (100)

# ஆஸ்பத்திரியில் தவறவிடப்பட்ட மேலும் சில அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம்,ஜூன்7

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்திற்குள் தவறவிடப்பட்ட அடையாள அட்டைகளில் மேலும் சில கண்டெடுக்கப்பட்டு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கீழே பெயர் குறிப்பிடுபவர்கள் உரிய ஆதாரங்களைக்காட்டி யாழ்.போதனா வைத்தியசாலையின் அலுவலகத்தில் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அடையாள அட்டைக்குரியவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

லோறன்ஸ் ஜனேசகன்னி - (மெலிஞ்சிமுனை மேற்கு, ஊர்காவற்றுறை), அரளம்மா கந்தையா (சுதுமலை, வலி.தென்மேற்கு), சின்னையா கனகம்மா (செபஸ்தியார் கோவிலடி, அளவெட்டி மேற்கு), காசிப்பிள்ளை கம்பதாசன் (பாரதி வீதி, கோண்டாவில் மேற்கு), பிறிசீலா கைலாசபிள்ளை (அரியாலை)-

கிருஷ்ணபிள்ளை ஜெயசிந்தா (முழங்காவில், விநாயகபுரம்), துரைச்சாமி ஆறுமுகம் (3ஆம் வாய்க்கால், பரந்தன்), சிவப்பிரகாசம் சிவதர்ஷன் (புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு), தட்சணாமூர்த்தி மனோகரமூர்த்தி (தெல்லிப்பழை கிழக்கு), வைத்திலிங்கம் தயாளன் (மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி) -

சந்திரவதனா இராசையா (ஏழாலை, யாழ்ப்பாணம்), சகிலா நவரத்தினம் (இமையாணன் வடக்கு, உடுப்பிட்டி), முருகுப்பிள்ளை இராசலட்சுமி (உடுத்துறை வடக்கு, தாளையடி). (202)

## பாராட்டு விழா

தென்மராட்சி,ஜூன்7

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அறவழிப் போராட்டக் குழுவினரால் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

எதிர்வரும் சனிக்கிழமை அறவழி நிலையத்தில் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம் தலைமையில் பாராட்டு விழா நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கடந்த வருடம் மேற்கொண்ட சேவைகளினால் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத்தில் கழகம் மற்றும் அதன் தலைவருக்கு முதவிடங்கள் கிடைத்ததையடுத்து இப்பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (117)

## ஆனைக்கோட்டையில் கடை உடைத்துத் திருட்டு

நவாலி,ஜூன்7

ஆனைக்கோட்டையில் இரவுவேளை வர்த்தக நிலையமொன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதிமிக்க பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

கடந்த வியாழக்கிழமை இரவு ஆனைக்கோட்டைச் சந்தியில் அமைந்துள்ள எஸ்.மரியதாஸ் என்பவரின் வர்த்தக நிலையத்தினை உடைத்து உள்நுழைந்த திருடர்கள், அங்கு வைக்கப்பட்டிருந்த பால்மா வகைகள், சிகரட் வகைகள் மற்றும் ஏனைய பொருள்களை எடுத்துச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டுத் தொடர்பாக மானிப்பாய் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (100)

# அரசின் மீதான நம்பிக்கையீனமே அகதிகள் தமிழகம் வரக் காரணம்

## சென்னை அரச சார்பற்ற நிறுவனத் தலைவர் தெரிவிப்பு

சென்னை, ஜூன்7

இலங்கையில் மீண்டும் ஒரு போர் வெடிக்கலாமென்றும், சமாதானம் ஏற்படாதென்றும் தமிழர்கள் நம்புகின்றனர். சிங்களக் காடையர்களிடமிருந்து அரசு தங்களைப் பாதுகாக்காதென தமிழர்கள் நம்புவதாலேயே அவர்கள் அணிகளாக தமிழகம் வருகின்றனர்.

- இவ்வாறு அகதிகளுக்கான நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அரச சார்பற்ற நிறுவனமொன்றின் தலைவரான எஸ்.சி.சந்திரஹாசன் சென்னையில் தெரிவித்திருக்கிறார். ஐ.ஏ.என்.எஸ். செய்திச் சேவைக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர் மேலும் கூறியிருப்பதாவது,

இலங்கையில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமை மற்றும் பாதுகாப்பின்மை போன்ற காரணங்களினால் பெருமளவு அகதிகள் தமிழகத்திற்கு வந்த வண்ணம் உள்ளனர். படகுகளுக்காக மேலும் பல அகதிகள் மன்னாரில் காத்திருக்கின்றனர்.

ஒன்பது மாதக் கர்ப்பிணியொருவர் கூட்டமான அகதிகளுடன் படகொன்றில் கடந்த வாரம் இராமேஸ்வரம் வந்திருந்தார். மிகுந்த சோர்வுடன் காணப்பட்ட அவரிடம், இந்தச் சிரமமான பயணத்தை ஏன் மேற்கொண்டீர்களெனக் கேட்டோம். தனது குழந்தை வாழ வேண்டும் என்பதற்காகவே தாம் இவ்வாறு வந்தார் என்று அந்தப் பெண்மணி கூறினார்.

இலங்கையிலிருந்து வரும் அகதிகள் ஒருவித அச்சத்துடனும், விரக்தியுடனுமே உள்ளனர். இலங்கை அரசு மீது அவர்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். இந்த நிலைமையில் பலர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கும், பலர் மன்னார் ஊடாக தமிழகத்திற்கும் சென்றவண்ணம் உள்ளனர்.

உடைமைகள், சொத்துக்களை விற்றுவிட்டு, படகுகளுக்குத் தலா ஆறாயிரம் ரூபா முதல் 12ஆயிரம் ரூபா வரை (இலங்கை நாணயப்படி) செலுத்தி இராமேஸ்வரத்திற்கு அகதிகள் வருகின்றனர். சில சமயங்களில் படகோட்டிகள், இராமேஸ்வரத்தை அண்டிய பகுதிகளிலுள்ள மணல் திட்டுக்களில் அகதிகளை இறக்கிவிட்டுச் சென்றுவிடுகின்றனர்.

இந்தியக் கடற்படையினர் மற்றும் கடலோரக் காவல்படையினர் அகதிகள் பலரை இவ்வாறான இடங்களிலிருந்து மீட்டுள்ளனர். அகதிகளின் நலன்பேண இந்தியா ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

- என்றார் அரச சார்பற்ற நிறுவனத்தின் தலைவர் சந்திரஹாசன். (க)

# அகதிகள் எண்ணிக்கை மூவாயிரத்தை முட்டியது

இராமேஸ்வரம், ஜூன்7

இலங்கையிலிருந்து மேலும் 61 அகதிகள் இராமேஸ்வரம் வந்திருக்கின்றனர்.

திருகோணமலை, திருக்கடலூர் உப்புவெளி மற்றும் மன்னார் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இந்த 61 அகதிகளும் தலைமன்னார் பேசாலை கடற்கரையிலிருந்து புறப்பட்டு தனுஷ்கோடி, அரிச்சல் முனை, ஓலைக்குடா ஆகிய பகுதிகளின் கடற்கரைகளில் வந்திறங்கினர்.

பொலீஸ் மற்றும் புலனாய்வுத்துறையினரின் விசாரணைக்குப் பின்னர் இந்த அகதிகள் மண்டபம் அகதிமுகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்களுடன் இவ்வருடத்தில் இலங்கையிலிருந்து அகதிகளாகத் தமிழகம் வந்திருப்போரின் எண்ணிக்கை மூவாயிரத்தை எட்டியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

## இரண்டு கிலோ ஹெரோயின்; குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை

இரண்டு கிலோ ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட நபர் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

கிருலப்பனை, சித்தார்த்த வீதியைச் சேர்ந்த அன்ரனி மைக்கல் மெரின் என்பவர் கடந்த 2001 ஆம் ஆண்டில் இரண்டு கிலோ ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவர் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டவரென்றும், இவரிடமிருந்து கைப்பற்றப்பட்டவை ஹெரோயின் போதைப் பொருள்களென்றும் உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து இடம்பெற்ற வழக்கு விசாரணைகளின் [illegible] நீதிமன்ற நீதிபதி [illegible] இவருக்கு ஆயுள் தண்டனையை விதித்தார்.

## பயணிகள் பஸ்ஸில் கைக்குண்டு மீட்பு

கொழும்பு, ஜூன்7

குருநாகலில் இருந்து கொழும்பு நோக்கி வந்த தனியார் பயணிகள் பஸ் ஒன்றில் இருந்து நேற்றுமுன்தினம் காலை கைக்குண்டு ஒன்றைப் அளவ்வை பொலீஸார் கண்டு பிடித்துள்ளனர்.

இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து குறிப்பிட்ட பஸ்ஸைப் பொல்கஹாவலையிலுள்ள அளவ்வைப் பகுதியில் நிறுத்தி பொலீஸார் சோதனையிட்டபோது அதில் கைக்குண்டு ஒன்றைக் கண்டெடுத்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக குறிப்பிட்ட பஸ் சாரதியும், நடத்துநரும் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டனர். பஸ்ஸும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

அந்த பஸ்ஸில் வந்த பயணிகள் அந்த இடத்திலேயே விசாரணை செய்யப்பட்டு வேறு பஸ்களில் கொழும்பு நோக்கிப் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

பொல்கஹாவல பொலீஸார் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க)

# அமெரிக்க அதிகாரிகள் மீது தாக்குதல்: ஐ.தே.க. பிரமுகருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜூன்7

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் மூன்றுபேர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அடையாள அணிவகுப்பின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாணசபை உறுப்பினர் துமிந்த சில்வா அடையாளம் காட்டப்பட்டார்.

இவரை எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் குசலா சரோஜினி வீரவர்த்தன உத்தரவிட்டார்.

[illegible] 'கிளப்' ஒன்றில் இரு [illegible] முன்னர் அமெரிக்க தூதரகத்தின் பாதுகாப்பு ஊழியர்களான ஆண்கள் இருவரையும் பெண் ஒருவரையும் தாக்கினாரென்ற சந்தேகத்தின் பேரில் ஐ.தே.க. மேல் மாகாணசபை உறுப்பினர் துமிந்த சில்வா, வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தபோது பொலீஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

நேற்று இவர் நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டபோது தூதரக அதிகாரிகள் இவரை அடையாளம் காட்டினர். இதனையடுத்து இவரை எதிர்வரும் ஒன்பதாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், துமிந்த சில்வாவைப் பிணையில் விடுதலை செய்யுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையையும் நிராகரித்தார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Jaffna College Undergraduate Dept
464, Hospital Road,
Jaffna.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**External Degree**
2007 பிரிவுக்கானது
(Jaffna University)
ஆரம்பம்: 17.06.2006 10 a.m.

**CIMA**
ஆரம்பம்: 17.06.2006 11.30 a.m.

**aat (SriLanka)**
Stage 1, Stage 11 & Stage 111
Medium- Tamil & English
ஆரம்பம்: 17.06.2006
9.00 a.m.
- Director.
(சி/49550) (39-17-19)


# சமுர்த்தி அலுவலர் பதவிக்கு 8ஆயிரம் பேர் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூன்7

யாழ்.மாவட்டத்தில் இருந்து சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் தரம் II பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை எண்ணாயிரத்து 600இற்கு அதிகம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கிடைக்கப்பெற்ற விண்ணப்பப் படிவங்கள் மாவட்ட ரீதியாகவும் பிரதேச செயலர் ரீதியாகவும் தரம்பிரிக்கப்படுகின்றன என்றும் - மாவட்டச் செயலாளர் பிரிவு ஊடாக நேர்முகப் பரீட்சை நடத்துவதற்கு ஏற்பாடுகளை மாவட்டச் செயலாளர்கள் மேற்கொண்டு வருகிறார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாக - குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆள்சேர்ப்பு செய்வது குறித்தும் ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(185)


வசீகர தோற்றத்திற்கு

**சந்தனாலேப**

(குளிர்ச்சி தரும் ஆயுள்வேத மேல் பூச்சு மருந்து)
வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப் பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுள்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச் சுற்றி கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை இருநிலாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, அரிப்பு, பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவுபடுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் ரிவேட் விசத்தை நீக்கி, சருமத்தில் சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.




யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
"சிவா நறுமணப் பூங்கா"
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.Phone: 222 2567

சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(சி/47483) (39-17-19)

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA SRI LANKA AYY PRO NO: REG.NO. A/L 250


# கல்விச் செயற்பாடு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூன்7

பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் யாவும் நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளன. எனவே, தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் இன்று காலை 8 மணிக்கு பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு வித்தியாலய அதிபர் இ.நாகேந்திரராஜா கேட்டுள்ளார்.


சிவமயம்

**திருமண அழைப்பு**

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான விய வருடம் வைகாசி மாதம் 26ஆம் நாள் (09.06.2006) வெள்ளிக்கிழமை விசாக நட்சத்திரமும் கன்னி லக்கினமும் சித்த யோகமும் கூடிய பகல் 1.06 மணி முதல் 2.20 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

எமது திருநிறைசெல்வன்
**வித்தியானந்தன்**
(ஆசிரியர்) அவர்களுக்கும்

எமது திருநிறைசெல்வி
**உஷாஆனந்தி**
(ஆசிரியை) அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு நல்லூர், "இளங்கலைஞர் மண்டபத்தில்" திருமாங்கல்ய தாரணம் செய்ய நிச்சயிக்கப்பட்டு இருப்பதால் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி எஸ்.இராசரத்தினம்
6/8, விதானையார் லேன்,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

திரு.எஸ்.பேரானந்தன்
உதவி அரச அதிபர் பணிமனை - நெடுந்தீவு
திருமதி எஸ்.பேரானந்தன்
ஓய்வுபெற்ற விரிவுரையாளர் - கோப்பாய் ஆசிரியர் கல்லூரி
17, (53), நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021-2225752.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(50883) (32-39-17-15)



ALLIANCE FRANCAISE DE JAFFNA
83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
Phone: 021 222 8093

யாழ்.பிரெஞ்சு நட்புறவுக் கழகம்
பிரெஞ்சு மொழி வகுப்புகள்

புதிய பிரிவு
கல்லூரி மாணவருக்கான வேலை செய்வோருக்கான மொழியியலும் ஆர்வமுள்ளோருக்கான தொடக்கநிலை வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இத்திட்டம் இலங்கையிலுள்ள பிரெஞ்சு தூதரகத்தின் உதவியுடன் நடைபெறுகின்றது.

ஒரு வருடத்தில் சர்வதேச தரத்திலான பிரெஞ்சு மொழி பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

பதிவு செய்தலுக்கு நேரில் வரவும்
அல்லது தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.
(56891) (39-17-19)



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ



யாழ்.தென்மராட்சி - சாவகச்சேரி நகர்- சங்கத்தானை- இத்தியடி

**அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்**

புனராவர்த்தன பிரதிஷ்டா நவகுண்டபட்ச மஹா யாக

**மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்**

இன்று(07.06.2006) புதன்கிழமை காலை 6.31 மணி முதல் 8.29 மணி வரை

**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் அருளாசிச் செய்தி**



சாவகச்சேரி நகர் சங்கத்தானையில் இத்திமரத்தை தல விருட்சமாகக் கொண்டு எழுந்தருளி இருந்து அருள்பாலிக்கும் விநாயகப் பெருமானுக்கு இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். ஒரு ஆலயத்தில் நடைபெறும் அபிஷேகங்களில் பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறுவது மகாகும்பாபிஷேகம். இது இன்று நடைபெறுவது ஊர்மக்களுக்கும் ஆலயத்திற்கும் புனிதத்தையும் தெய்வீகத்தையும் ஏற்படுத்துவதாகும். வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு எங்கும் பரந்து இருக்கும் இறைவன் ஆலயங்களில் நிதர்சனமாக வீற்றிருக்கிறான். இதனை நம்சமயம் நித்தலும் எம்பிரான் கோயில் புக்கு என்றும் ஆலயம் தொழுவது சாலவும் நன்று, எனவும் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் எனவும் போற்றி நிற்கின்றது. ஆலய வழிபாட்டினூடாக மனித நேயத்தையும் மனித பண்புகளையும் ஏற்படுத்திக் கொள்ளலாம். மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு அரிய பிறவியாகிய மானிடப்பிறவி நமக்கு கிடைத்தமை நாம் செய்த புண்ணியப் பேறாகும். இப்பிறவியின் பயனைப் பூரணமாக அடைவதற்கு அனைவரும் இக்கும்பாபிஷேகத்தை தரிசித்து மனஅமைதியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ்வோமாக. இக் கும்பாபிஷேகத்தை நடத்தும் ஆலய பரிபாலன சபையினரையும், ஆலய குருமார்களையும் ஊர் மக்களையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக!

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

-ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.

**பிரதிஷ்டா பிரதம குருவின் ஆசியுரை**



சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடி வீரகத்தி பெருமானின் திருப்பணிகள் நிறைவேறி கும்பாபிஷேகம் நிகழ்வுறுவது அனைவருக்கும் ஆனந்தமாகும். சைவமும் தமிழும் தமது உயிரென உணர்வு பூர்வமாக மதிக்கும் மக்கள் வாழும் புண்ணிய பூமி தென்மராட்சி சாவகச்சேரியாகும்.

இங்கு சங்கத்தானையில் இத்தி மரத்தை தல விருட்சமாக கொண்டு தானே எழுந்தருளி முத்துப்போல் சிறிய உருவம் தாங்கி மூலாலயத்தில் கீர்த்தி மிக்கவராக கொலுவிருந்து தம்மை வணங்குபவருக்கு அருள் மழை பொழிகிறார்.

வரலாற்று பெருமைகளும் அருள் சிறப்பும்முடைய இவ் ஆலயத்தில் பல திருப்பணிகள் குறுகிய காலத்தில் நிறைவு செய்யப்பட்டு ஆலயம் புதுப்பொலிவும், பூரணமும், அழகும் தெய்வீகத்துடன் அமைவுற இன்று நவகுண்ட பட்ச உத்தமமாக யாகம் அமைத்து - மகா கும்பாபிஷேகம் நிகழ்வுறுகின்றது.

தெய்வீக, திருப்பணிகளை இத்தியடி வாழ் சைவ மக்களினதும், அன்பர்களினதும் உதவியுடன் ஆலய பரிபாலன சபையினர் நிறைவு செய்துள்ளனர். பல சிவாச்சாரியார்கள் கிரியைகளில் கலந்து கொண்டு யாகங்களை, நிறைவு செய்து உதவ கும்பாபிஷேகத்தை திருவருள் துணையுடன் பிரதம குருவாக செய்யக் கிடைத்தமை எனக்கு தெய்வீகப் பேறாகும்.

கும்பாபிஷேக விழாவின் மூலம் தெய்வீக அருட் சக்தியுடன் வீரகத்தி பெருமானைவீற்றிருக்க செய்து அருள் வேண்டி வழிபாடுகளைச் செய்வதுடன் விநாயகர் பணியில் ஈடுபடும் ஆலய பரிபாலன சபையினருக்கும், குறிப்பாக இவ் ஊர் சைவ மக்களுக்கும்தொண்டுகள் பல செய்யும் இளைஞர்களுக்கும் விநாயகப் பெருமான் அருள் மழை பொழிய வேண்டியும் கும்பாபிஷேகம் செய்வித்தாலன், திருப்பணிகள் செய்தாலன் கிடைக்க பிரார்த்தித்து எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகப் பெருமான் திருவருளால் சகலருக்கும் சௌபாக்கியங்களும் அனைத்து நலன்களும் கிடைக்க வேண்டி நல்லாசிகள் கூறி அமைகின்றேன்.

எல்லோரும் இன்புற்றிருக்க பிரார்த்திப்போமாக!

"வேதாகமசிவசுரபி"
'கலாநிதி' சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் J.P.
(நல்லை ஆதீன சிவாச்சாரியார்)
(பிரதிஷ்டா பிரதமகுரு)

**பரிபாலன சபையின் ஆசிச் செய்தி**

சைவமும், தமிழும் இரு கண்ணென ஏற்றிப் போற்றி வளர்க்கும் சிவபூமி, புண்ணிய பூமியாம் தென்மராட்சி பகுதியில் சாவகச்சேரி நகர் சங்கத்தானை இத்தியடி என்னும் தெய்வீகப் பதியில் கோயில் கொண்டு எழுந்தருளி அருள் மணம் பரப்பிக் கொண்டிருக்கும் விநாயக் பெருமானின் குடமுழுக்கு (கும்பாபிஷேகம் நடத்த திருவருள் பாலித்துள்ளமை சிறப்பு மிக்க அம்சமாகும். பிரணவப் பொருளாய் விளங்குபவர் விநாயகர். ஓம் என்பது பிரணவ மந்திரம். ஒலித்த கோம்பில் இருந்து பிரணவர் சுழி ஆரம்பமாகின்றது இதனை ஒங்காரம் என்பர். இந்த ஓங்காரத்தின் வடிவமே விநாயகர் பெருமான்.

எம் பெருமானின் குடமுழுக்கு நிகழ்வை கண்ணாரக் கண்டு வாயார வாழ்த்த நாலாயிரங்கண் படைத்திலனே அந்த நான்முகனே! என்று எண்ணத் தோன்றுகின்றது. ஊருக்கும், ஊர் வாழ் மக்களுக்கும் புனித தத்துவத்தை ஏற்படுத்துவது சாலச் சிறப்புடையது. அத்தகைய பெருமையை இத்தியடி வாழ் மக்கள் செய்தார்கள் என எண்ணும் போது மெய்சிலிர்க்கின்றது. எம் பெருமானின் குடமுழுக்கு வைபவம் சிறப்புற நடத்திய சிவாச்சாரிய பெருமக்களுக்கு சகல பேறுகளையும் நல்க எம் பெருமானின் பாதாரவிந்தங்களைப் பணிந்து நிற்கின்றோம்.

(503669)

- ஆலய பரிபாலன சபையினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லை. வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வாண்மை விருத்தி வதிவிடப் பயிற்சி வகுப்பு

புதுக்குடியிருப்பு,ஜூன்7

முன்பள்ளிகளை அபிவிருத்தி செய்யும் ஆண்டினை முன்னிட்டு முல்லைத்தீவு வலயத்துக்கு உட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வாண்மை விருத்தி வதிவிடப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

இப்பயிற்சிநெறி அண்மையில் இரு நாள்களாக புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது.

இதில், சிறுவர் உளநலம், விளையாட்டு அல்லாத விளையாட்டு, முன்பள்ளிக்கு சிறுவர்களை எப்படி வரவைப்பது, ஆசிரியர் உளப்பாங்கு, மகிழ்ச்சிகரமான கல்வி போன்ற தலைப்புகளில் ஆசிரிய ஆலோசகர்கள், வள ஆளணியினரால் வழங்கப்பட்டன.

இதில் 40இற்கும் மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. இப்பயிற்சிப் பட்டறையை முன்பள்ளி அபிவிருத்தி கல்வி நிலையமும் முல்லைத்தீவு கல்விப் பணிமனையும் இணைந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிதிய அனுசரணையுடன் நடத்தின. (341)

## சேதமடைந்த குளத்தினால் பெரும் சுகாதாரச் சீர்கேடு

புதுக்குடியிருப்பு,ஜூன்7

புதுக்குடியிருப்பு உலகளந்தபிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் உள்ள குளம் பெரிதும் சேதமடைந்து காணப்படுகிறது. இதனால், குளத்து நீர் வீதிகளில் தேங்கி பெரும் சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்துவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி குளம் பலகாலமாகச் சேதமடைந்து காணப்பட்டது. இதனை எவரும் திருத்தியமைக்க முன்வரவில்லை. கடந்த மழை காலத்தின்போது இக்குளம் மேலும் சேதமடைந்தது. இதனால் குளத்துக்குவரும் நீர் வீணாக வீதிகளில் ஓடுகிறது.

இதனால், வீதி அரிக்கப்பட்டு பாரிய குண்டும்குழியுமாகக் காணப்படுகிறது. தேங்கி நிற்கும் நீரினால் நுளம்பு போன்ற நோய்க் காவிகள் பெருகுவதுடன், பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகிறது. வீதிகளில் பயணம் செய்வோர் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

கோயில், பாடசாலை மற்றும் கிராமங்களுக்குப் பயணிக்கவேண்டிய இந்த வீதியின் அவலத்தால் இப்பிரதேச மக்கள் பெரும் கஷ்டத்துடன் குச்சொழுங்கைகளால் பயணம் செய்யவேண்டியிருக்கிறது.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (353)

## முல்லை. அரச சார்பற்ற இணையத்துக்கு நிழல் பிரதியாக்கல் இயந்திரம் அன்பளிப்பு

முல்லைத்தீவு,ஜூன்7

புலம்பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச அமைப்பு முல்லைத்தீவு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்திற்கு நிழல் பிரதியாக்கல் இயந்திரம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியது.

மேற்படி நிகழ்வு கடந்த 27ஆம் திகதி முல்லைத்தீவு அரச சார்பற்ற நிறுவன மண்டபத்தில் இடம்பெற்றது.

புலம்பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச அமைப்பின் திட்ட அலுவலர் உதயகுமார், முல்லைத்தீவு அரச சார்பற்ற இணையத்தின் உப தலைவர் சி.கதிரவேல்பிள்ளையிடம் நிழல் பிரதியாக்கல் இயந்திரத்தைக் கையளித்தார்.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரச சார்பற்ற இணையத்தின் செயலாளர் சுரேஸ் மற்றும் பலரும் இதில் கலந்துகொண்டனர். (190)

## கிராமிய புனர்வாழ்வுக் குழுவுக்கு புதிய நிர்வாக சபை தெரிவு

கிளிநொச்சி,ஜூன்7

கிளிநொச்சி கனகபுரம் கிராமத்தின் கிராமிய புனர்வாழ்வுக் குழுவின் புதிய நிர்வாக சபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி பிற்பகல் 4 மணிக்கு கனகபுரம் அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் புனர்வாழ்வுக் குழுவின் தலைவர் அ.கனகரத்தினம் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதில், கிளிநொச்சிப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் போர்ப்பிரியன், கிளிநொச்சிப் பிரதேச அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சிறிநாத், கனகபுரம் - ஜெயந்திநகர் வலயச் சிறப்புப் பொறுப்பாளர் தர்சன், கனகபுரம் கிராம அலுவலர் உட்பட கிராம அபிவிருத்திச் சங்க, மாதர் சங்கப் பிரதிநிதிகள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர்.

இக்குழுவின் தலைவராக எஸ்.சிவதாசன், துணைத் தலைவராக தயாநந்தினி, செயலாளராக நடராசா, துணைச் செயலாளராக ஜெயந்தினி ஆகியோரும் ஏழு நிர்வாகக் குழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (405)

## 18 மாவீரர்களின் நினைவுக்கல் முறிகண்டி வித்தியாலயத்தில் நடுகை

பரந்தன்,ஜூன்7

முறிகண்டி இந்து வித்தியாலயத்தில் கல்வி பயின்று தாயக விடுதலைக்கு தம்மை ஆகுதியாக்கிய 18 மாவீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுக்கல் முறிகண்டி இந்து வித்தியாலய வளாகத்தில் அண்மையில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

வித்தியாலய அதிபரின் நெறிப்படுத்தலில் அமைக்கப்பட்ட இந்நினைவுக் கல்லை மாவீரர் சுடர்வேலின் தாய் திரைநீக்கம் செய்துவைத்தார்.

தொடர்ந்து அந்த மாவீரர்களின் பெற்றோர் நினைவுச் சுடரை ஏற்றிவைத்தனர். இந்நிகழ்வில் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர், வர்த்தக சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பெருமளவானவர்கள் கலந்துகொண்டனர். (352)

## களமுனைப் போராளிகளைச் சந்தித்து திருமுறிகண்டி மக்கள் உணவுப் பொதி

வட்டக்கச்சி,ஜூன்7

திருமுறிகண்டிப் பகுதி மக்கள் அண்மையில் களமுனைப் போராளிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். களமுனைப் போராளிகளுக்காக இவர்கள் உணவுப் பொருள்களையும் எடுத்துச் சென்று வழங்கியுள்ளனர்.

களநிலைமைகள் தொடர்பாகத் தளபதி ரமேஸ், தளபதி கீர்த்திகா ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

சமகால அரசியல் தொடர்பாகவும் மக்கள் கருத்துக்கள் தொடர்பாகவும் அரசியல்துறையைச் சேர்ந்த ஜெகன் உரை நிகழ்த்தினார்.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் அருள், பிரதேச் அரசியல்துறைப் பொறுப்பாளர் சுடர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.(405)

## வன்னியில் பல்வேறு இடங்களிலும் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

புதுக்குடியிருப்பு,ஜூன்7

வன்னியில் பல்வேறு இடங்களிலும் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசிகள ஏற்றப்பட்டு வருகின்றன.

தேவிபுரம், வள்ளிபுனம், கைவேலி, கேம்பாவில், இரணைப்பாலை ஆகிய கிராமங்களில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கே தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தினர் புதுக்குடியிருப்பு பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர், புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் ஆகியோர் இணைந்து இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை - ஜூன் மாதம் நாய் அழிப்பு மாதமாகப் பிரகடனம் செய்யப்பட்டதையடுத்து கடந்த முதலாம் திகதி தொடக்கம் 3ஆம் திகதிவரை 200இற்கும் மேற்பட்ட கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கப்பட்டுள்ளன என்று தமிழீழ சுகாதார சேவையினர் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ சுகாதார சேவையினர், கண்டாவளை வைத்திய அதிகாரி பிரிவினர், கரைச்சிப் பிரதேச சபையினர் ஆகியோர் இணைந்து இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

புளியம்பொக்கணை, கரவெட்டித்திடல், தருமபுரம், விசுவமடு, முரசுமோட்டை, உடவனூர், குமரபுரம், பரந்தன் பகுதிகளில் இக்கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இச்செயற்பாடுகள் ஏனைய பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்படவுள்ளன எனவும் - இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்று தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுள்ளனர். (353)

## வற்றாப்பளை அம்மன் பொங்கல் காலத்தில் பொலித்தீன் பயன்படுத்துவதற்குத் தடை

புதுக்குடியிருப்பு,ஜூன்7

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயப் பொங்கல் திருவிழாவின்போது பொலித்தீன் பயன்படுத்துவது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவுள்ளது.

திருவிழா தொடர்பான கலந்துரையாடல் கடந்த வாரம் ஆலய முன்றிலில் நடைபெற்றது.

அறங்காவலர் சபைத் தலைவர் குகதாசன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (353)

## தர்மபுரம், முரசுமோட்டையில் கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

புதுக்குடியிருப்பு,ஜூன்7

கண்டாவளை பிரதேச சபையினர் தர்மபுரம் மற்றும் முரசுமோட்டைப் பகுதிகளில் கட்டாக்காலியாகத் திரியும் நாய்களை அழிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கட்டாக்காலி நாய்கள் பெருகியுள்ளன என்றும் -

அவை வீதிகளில் பயணிப்போருக்குப் பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றன என்றும் - பொது மக்கள் செய்த முறைப்பாடுகளை அடுத்தே பிரதேச சபையினர் நாய்களைப் பிடித்து அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன், தற்போது நாய்களில் நீர் வெறுப்பு நோய் பரவிவருகிறது. அதனால் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துவது அவசியம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (353)

## உடுத்துறை மக்களுக்கு மருத்துவ சேவை

கிளிநொச்சி,ஜூன் 7

தமிழீழ சுகாதார சேவையினரால் வடமராட்சி கிழக்கு உடுத்துறை கிராம மக்களுக்கு நடத்தப்பட்ட மருத்துவ சேவையில் 160 இற்கும் மேற்பட்டோர் சிகிச்சைகளைப் பெற்றனர்.

உடுத்துறை, 9ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்ற இந்த மருத்துவ சேவையில் பொது மருத்துவ சிகிச்சை, பற்சிகிச்சை, சுதேச மருத்துவ சிகிச்சை, கண் பரிசோதனை போன்றன நடத்தப்பட்டன.

## ரி.ஆர். ரெக் நிறுவனத்தில் இலவச கற்கை நெறிகள்

வட்டக்கச்சி,ஜூன் 7

கிளிநொச்சி ரி.ஆர்.ரெக் நிறுவனத்தில் இலவச கற்கைநெறிகள் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளன.

ரி.ஆர்.ரெக் நிறுவன முதல்வர் த.பிரதாப் தலைமையில் கடந்த 26ஆம் திகதி நடைபெற்ற இந்நிகழ்வில் மூன்று இலவச கற்கை நெறிகள் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

யு.என்.ஹபிட்டாஸ் நிறுவன நிதியுதவியுடன் பொருண்மிய மதியுரையக அனுசரணையுடன் இக்கற்கைநெறிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கற்கை நெறியில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள திருநகர், உருத்திரபுரம், ஸ்கந்தபுரம், பரந்தன், ஊற்றுப்புலம் கோரக்கன்கட்டு, தர்மபுரம் கிழக்கு, ஜெயந்திநகர் கிழக்கு, உமையாள்புரம், கணேசபுரம் ஆகிய கிராமங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 65 மாணவர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 20 பேருக்கு கணனிக் கற்கை நெறியும் 20 பேருக்கு ஆங்கிலக் கற்கை நெறியும் 25 பேருக்குக் கணக்கீட்டுக் கற்கை நெறியும் வழங்கப்பட்டுவருகின்றன.

இதுதொடர்பான ஆரம்ப நிகழ்வில், பொருண்மிய மதியுரையக நிறைவேற்றுப் பணிப்பாளர் சி.சுகுணன், யு.என். ஹபிட்டாஸ் நிறுவனப் பொறியியலாளர் சுரேஷ்குமார் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இவற்றைவிட ஏற்கனவே பல்வேறு கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (405)



முல்லைத்தீவு மாவட்டத்தில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் அதிகூடிய சித்திகளைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் முல்லைத்தீவு இலங்கை வங்கிக் கிளையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் கலந்துகொண்ட கல்விப் பணிப்பாளர், வங்கியாளர்கள், பணியாளர்கள், அதிகூடிய பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் ஆகியோரை முதலாவது படத்திலும் [illegible] சித்திபெற்ற மாணவிகளை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: புதுக்குடியிருப்புச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
ஸ்ரீ ராம ஜெயம்

யாழ்ப்பாணம் - வண்ணை
ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
**ஏகாதசி உற்சவம் 07-06-2006**

நிகழும் விய வருடம் வைகாசி மாதம் 24ஆம் திகதி இன்று மு.ப 10.30 மணிக்கு ஏகாதசி உற்சவம் நடை பெறும். அடியார்கள் இந்த உற்சவத்தில் பங்குபற்றி ஸ்ரீமந் நாராயணன் அருள்பெற்று ஸ்ரீமகாலக்ஷ்மி விலாச சம்பன்னாக வாழ்வீர்களாக.

(சி-48977)(21.11.14) — ஆதீன மகாசபை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**நமசிவாயம் சங்கரலிங்கம்**
ஐயா அவர்கள்

ஜனசக்தி காப்புறுதிக் கம்பனியின் வரலாற்றில் முதல் தடவையாக MDRT சர்வதேச விருதினை இரு தடவைகள் பெற்று 09.06.2006 அன்று அமெரிக்கா பயணமாகின்றார். அவர் மேலும் பல சாதனைகள் செய்ய வேண்டும் என்று மனதார வாழ்த்துவதில் பெருமை அடைகின்றோம்.

(50896)

அலுவலர்கள், முகவர்கள்
நெல்லியடிக் கிளை, யாழ்.மாவட்டக் காரியாலயம்,
ஜனசக்தி காப்புறுதிக் கம்பனி.

## 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 19 - 12 - 1942



உதிர்வு 11 - 06 - 1992

**அமரர் மாணிக்கம் தங்கவடிவேல்**
*(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்)*
*திதி: 07-06-2006 ஏகாதசி*

எமக்குள் உயிராயிருந்தீர்கள்
ஊருக்கும் உறவுகட்கும்
ஒளியாயிருந்து வழிகாட்டினீர்கள்
பதினான்கு ஆண்டுகளென்ன
பதினான்கு யுகமாயினும்
மறைந்து போகாது உங்கள் நினைவுகள்

*'தங்கத்தாமரை'*
*அல்வாய்.* (50912)(26.11.14.21)
*பிரிவால் துயருறும்:*
மனைவி, பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
M.A. ஆறுமுகம் குமாரசாமி
(சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும்)

தோற்றம் 13-12-1913
மறைவு 08-05-2006

கடந்த 08-05-2006 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குலக்கொழுந்து அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (07-06-2006) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.
(50908)(26.21.11.14)

அன்னாரின்
குடும்பத்தினர்.

# Vacancy - Immediate
## EcoSec (Relief) Field Officer

The International committee of the Red Cross, Kilinochchi Subdelegation, is seeking for a highly competent, experienced professional for the role of a **Field officer in its Economic security (ECOSEC) Department.**

**Female candidates are encouraged to apply**

The candidate should have the following **qualifications:**

- Completion of 'A' Level Education, Degree in Social sciences, agriculture or veterinary preferred
- Excellent computer literacy in MS office and in database management
- Very good spoken and written English and Tamil
- Working experience with an NGO or an international organization
- Good knowledge of the Vanni region (geography and culture) is a must

**core responsibilities** Include:

- Conduct Emergency operations assessments and provide adequate recommendations, in close collaboration with local authoritels.
- Channels all relevant information related to the context in general and specific surroundings.
- Briefs interlocutors on ICRC activities.
- Assist ECOSEC delegate in designing and implementation of community based programs and livelihood support projects for the most poor people.
- Assist ECOSEC delegate in the assessment if management skills of community and initiate with District Departments training when required.
- Contribute to the sensitization of target communities in order to help them to make better choices and determine priorities, mobilize resources, request finacing and implement and manage livelihood support programs.

**Employment Conditions:**

According to ICRC's National Scale and employment conditions.

Suitable candidates are invited to submit their complete CVs (incl.photocopy of experience certificates) to ICRC's office in Kilinochchi until **Friday, 16th of June 2006.** Qualified candidates will be contacted for Interviews.

**INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS**
Subdelegation Kilinochchi
Iraniamadu Junction
Kilinochchi.
**Phone: 071 237 56 97 / 071 270 24 03**

(C/49558) (24)

# Vacancy - Immediate
## Medical Field Officer

The international Committee of the Red Cross, Kilinochchi Subdelegation, is seeking for highly Competent, experienced professional for the role of a **Field Officer in its Medical Department.**

**Female Camdidates are encouraged to apply**

The candidate should have the following **qualification:**

- Completion of "A" Level Education or professional school of similar level
- Field experience in Health or Community Development
- Minimum 2 years practice in the health field or equivalent
- Very good spoken and written English and Tamil
- Teaching experience is desirable

**Core responsibilities** include

- Plans and carries out activities needed for the field
- Documents all visits, follow-up visits, reports difficulties and recommends solutions
- Supports the program delegate in the monitoring of the activities of the Field Project
- Maintains consistency in program activities by coordinating activities with the assistants
- Assists with the planning, preparation, implementation, monitoring and evaluation of training for CHWs and HVs

We are looking for a person with a strong commitment to humanitarian work. This person must demonstrate a capability to work independently and show initiative. Capacity to develop contacts, to negotiate and to analyze situations will be considered as essential assets for the candidates.

**Employment Conditions:**

According to ICRC's National Scale and employment conditions

Suitable candidates are invited to submit their complete CVs to ICRC's office in Killinochchi until **Friday,16th of June 2006.** Qualified Candidates will be contacted for interviews

**INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS**
Subdelegation Kilinochchi
Iraniamadhu Junction Kilinochchi
Phone:071 237 5697/071 270 2403

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக் அணு உலையை இஸ்ரேலியர் தகர்த்தெறிந்த நினைவு நாள் இன்று

டெல்அவிவ்,ஜூன்7

ஈராக்கியரின் 'ஒஸிராக்' அணு உலையை இஸ்ரேலியரின் போர் விமானங்கள் 1981 ஆம் ஆண்டு ஜூன் 7ஆம் திகதி குண்டு வீசித் தகர்த்தெறிந்தன.

அணு உலையில் எரிபொருள் நிரப்பி முழுமையாகச் செயற்படுவதற்கு இடமளிக்காமல் இஸ்ரேலியர் இந்தக் காரியத்தைச் செய்துமுடித்தனர்.

இந்தச் சம்பவத்தில் 10 ஈராக்கியப் படையினர் கொல்லப்பட்டனர். பிரான்சிய ஆய்வாளர் ஒருவரும் இறந்தார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபை இச்செயலை வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

இந்த அணு உலை இஸ்ரேலுக்கு சிம்ம சொப்பனமாக இருந்தது. அதுமட்டும் முறையாகச் செயற்பட்டிருக்குமானால் இஸ்ரேல் நாடு முழுமையாகப் பூமியிலிருந்து அழிந்து போயிருக்கும் என்று இஸ்ரேலியர் இன்றும் நினைக்கிறார்கள்.

சதாம் ஹுசேனின் ஈராக்கிய அணு உலையின் மீது இஸ்ரேலியர் எவ்வாறு திட்டமிட்டு தாக்குதல் நடத்தினார்கள் என்பது பற்றிய விவரம் இப்பொழுது வெளிவந்துள்ளது.

ஒஸிராக் அணு உலை மீது குண்டு வீசிய விமானிகளில் ஒருவர் பிற்காலத்தில் இஸ்ரேலின் முதலாவது விண்வெளிவீரராகப் புகழ்பெற்றார்.

கொலம்பியா விண்வெளி ஓடம் பூமிக்குத் திரும்பிக்கொண்டிருந்தவேளையில் கொல்கிலன் ரமோன் என்ற அந்த இஸ்ரேலிய விண்வெளி வீரர் கொல்லப்பட்டார்.

ஒஸிராக் உலை மீதான தாக்குதல் ஒரு பெரும் சவாலாகவே இஸ்ரேலியரை எதிர்நோக்கியிருந்தது. புதிய ஜெட் விமானங்களில் குண்டுகள் மற்றும் மேலதிக எரிபொருளை ஏற்றிக்கொண்டு எதிரி பிரதேசங்களுக்கு மேலாக சுமார் 2 ஆயிரம் கி. மீற்றர் (1200 மைல்) தூரம் சுற்றுவட்டமாகப் பறக்க வேண்டியிருந்தது.

ஒரு **F16** ரக விமானத்தில் எங்களில் எவரும் 100 தடவைகளுக்கு மேல் பறந்ததில்லை. இந்த விமானம் முழுவதுமே புதியது. அதன் வீச்சு எல்லை தெளிவாக இருக்கவில்லை என்று விமானிகளில் ஒருவர் கூறினார். சைனாய் பாலைவனத்தில் அமைந்திருந்த எட்ஸியோன் ஓடு தரை பற்றி இன்னொரு விமானி கருத்துக் கூறினார். இந்த இடம் பின்னர் எகிப்தியர் வசம் வந்துவிட்டது.

அந்த ஓடு தரையில் இருந்து எங்கள் விமானங்களை அவ்வளவு பாரத்துடன் மேலே செலுத்துவது சாத்தியமாக இருக்குமா என்பதில் எனக்கு யோசனையாய் இருந்தது என்றார் முதலாவது விமானி.

அன்றையதினம் உள்ளூர் நேரம் 1600 (1300**GMT**) மணிக்கு எட்டு **F** 16 ரக விமானங்களும் தங்கள் வழிகாட்டு விமானங்களுடன் பத்திரமாகத் தெளிவான விண்வெளியில் கிளம்பிச் சென்றன என்றார் அவர்.

எதிர்ப்பு எதுவுமின்றி பறந்துசென்றோம் தூரத்தில் மேற்கில் தாழ்வான சூரிய ஒளியில் அணு உலை பிரகாசிப்பது தெரிந்தது என்றார் மூன்றாவது விமானி.

தனது **F** 16 விமானம் குண்டுகளைப் பொழிவதற்கு மேலே எழுந்தபோது விமானியின் அறையிலிருந்து வலதுபக்கம் பக்தாத்தையும் இடதுபக்கம் அணு உலையையும் பார்த்ததாகக் கேணல் ராஸ் என்பவர் கூறினார்.

ஒரு நிமிடத்துக்குள் எட்டு விமானங்களும் தமது இரட்டைக் குண்டுகளை ஒஸிராக் மீது பொழிந்துதள்ளின. இரண்டு மட்டும் வெடிக்கவில்லை.

குண்டுகளைப் பொழிந்தபின் எரிபொருள் பற்றிய கவலை காரணமாக எதிரி விமானங்களுடன் மோதுவதைத் தவிர்த்து ஊர் திரும்புவதிலேயே அதிக கவனம் செலுத்தினர்.

எட்ஸியோனில் மீண்டும் தரை இறங்கிய போது ஒருவரையொருவர் கட்டித் தழுவிக்கொண்டு விமானிகள் நாடு திரும்புவதிலேயே அக்கறை கொண்டிருந்தனர்.

ஒஸிராக் அணு உலை மீதான தாக்குதலின் 25ஆவது ஆண்டு நினைவு நாளை இஸ்ரேலியர் இன்று கொண்டாடுகிறார்கள்.

இந்தத் தாக்குதல்களில் ஈடுபட்ட விமானிகளில் பலர் யூதர்களுக்கெதிரான நாஸிகளின் படுகொலைச் சம்பவத்தில் உயிர் இழந்தவர்களின் சந்ததியினராவர். (ப)

## பூகம்பத்தில் இறந்தோர் 5,782 பேர் மட்டுமே

ஜகார்த்தா, ஜூன்7

இந்தோனேசியாவின் ஜாவா தீவில் ஏற்பட்ட பூகம்பத்தில் 5 ஆயிரத்து 782 பேர் தான் இறந்தனர் என்று அரசுத் தரப்பில் கடந்த திங்கட்கிழமை தெரிவிக்கப்பட்டது.

பூகம்பத்தால் 36 ஆயிரத்து 300 பேரே காயமடைந்தனர். 46 ஆயிரம் பேர் காயமடைந்ததாக முன்னர் வெளியான தகவல் சரியானதல்ல என்றும் அரசு தெரிவித்துள்ளது.

மே 27இல் ஏற்பட்ட இந்தப் பூகம்பத்தில் 6 ஆயிரத்து 234 பேர் இறந்ததாகக் கடந்த வாரம் சமூக விவகார அமைச்சகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## ஈராக்கில் 50 பேர் கடத்தல்

பக்தாத், ஜூன்7

இனம்தெரியாத துப்பாக்கிதாரிகள் ஈராக்கியத் தலைநகரில் குறைந்தது 50 பொது மக்களைக் கடத்திச் சென்றுள்ளார்கள்.

சாலிஹியா என்ற வீதியில் 13 கார்களில் வந்துசேர்ந்த இந்த துப்பாக்கிதாரிகள் ஈராக்கிய விசேஷ பொலீஸாரின் உடைகளை அணிந்திருந்ததாகக் கூறப்படுகின்றது. (ப)

# இலங்கைத் தமிழர் தொடர்பான விவகாரத்தில் மத்திய அரசின் முடிவுதான் எங்கள் முடிவும்

### புதுடில்லியில் கருணாநிதி தெரிவிப்பு



புதுடில்லி,ஜூன்7

இலங்கைத் தமிழர் விடயம் தொடர்பாக மத்திய அரசு எடுக்கும் முடிவு தான் தமிழக அரசின் முடிவாகவும் இருக்கும் என்று தமிழ் நாடு முதலமைச்சர் மு.கருணாநிதி புதுடில்லியில் கூறினார்.

மத்திய அரசுத் தலைவர்களைச் சந்தித்ததன் பின்னர் கருணாநிதி செய்தியாளர்களி டம் பேசினார்.

பிரதமரைச் சந்தித்த பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அவரிடம் "மற்ற கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியமைத்துள்ள தி.மு.க. அரசு எவ்வளவு நாள் நீடிக்கும்?" என்று கேட்டபோது,

'ஆட்சி எவ்வளவு நாள் நடக்கும் என்று கவலைப்படாதவன் நான். மூன்று தடவை ஆட்சியை இழந்திருக்கிறேன். எவ்வளவு நாள் என்று கணிக்க வேண்டிய அவசியமே இல்லை. என்னால் முடிந்தவரை மக்களுக்காகச் செய்வேன். செய்யமுடியாத, செய்யக் கூடாத நிலை வந்தால் அதைச் சந்திப்பேன்' என்றார்.

நாளை என்ன நடக்கும் என்று யாருக்குத் தெரியும் என்று கேட்ட அவர், மறைந்த அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல்ராஜன் திடீரெனக் காலமாகிவிட்டதை நினைவு கூர்ந்தார்.

தி.மு.க. அரசு, "மைனாரிட்டி அரசு" என்ற கருத்தை வலுவாக மறுத்த அவர், 'ஜெயலலிதா சொல்வதைப் போல் சொல்கிறீர்கள். வாஜ்பாய் அரசு பெரும்பான்மையுடன் இருந்ததா? ஜெயலலிதாவின் கடிதத்துக்காக அவர்கள் காத்திருக்கவில்லை? என்று கேள்வி எழுப்பினார். நாங்கள் கூட்டணியாக நின்றுதான் ஜெயித்தோம் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

கருணாநிதி வழங்கிய செவ்வி வருமாறு:

**கே: ஆட்சியில் காங்கிரஸ் பங்கு கேட்கிறதே?**

ப: புதுவையில் அவர்கள் (காங்கிரஸ்) ஆட்சிக்கு தி.மு.கவும் தமிழகத்தில் தி.மு.க. ஆட்சிக்கு காங்கிரஸும் ஆதரவு தருவது என்று ஏற்கனவே பேசி முடிக்கப்பட்ட விடயம். அதற்கு மேல் உங்கள் (பத்திரிகையாளர்) முடிவு.

**கே:ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் ம. தி.மு.க. நீடிக்கிறதா?**

ப: ம.தி.மு.க. எங்கே இருக்கிறது? கூட்டணியில் மட்டுமல்ல. அது இருப்பதாகவே எனக்குத் தெரியவில்லை. இல்லாத விஷயத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்.

**கே:இலங்கைப் பிரச்சினை பற்றி?**

அண்மையில் சென்னை வந்த ஆறுமுகம் தொண்டமானிடமும் மற்றவர்களிடமும் இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு எடுக்கும் முடிவுதான் எங்கள் முடிவு என்று கூறியிருக்கிறோம். இதுவரை 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகள் தமிழகம் வந்திருப்பதைப் பிரதமரிடமும் சோனியா காந்தியிடமும் சொல்லி இருக்கிறேன்.

**கே:பெற்றோல், டீசல் விலை உயர்வு குறித்து?**

ப: விலை உயர்வுக்கு மத்திய அரசு காரணம் என்று சொல்லமுடியாது. உலக சந்தையில் ஏற்படும் உயர்வுதான் காரணம். அதே நேரத்தில் இடதுசாரிக் கட்சிகளின் எதிர்ப்பையும் புறக்கணித்துவிடமுடியாது. இரண்டுக்கும் இடைப்பட்டு சாதாரண மக்களைப் பாதிக்காத வகையில் செயற்படவேண்டும்.

# கடல்நீரைக் குடிதண்ணீராக்கும் திட்டம்: உடனடியாக ஆய்வை ஆரம்பிக்க முடிவு

புதுடில்லி,ஜூன்7

சென்னையில் ஆயிரம் கோடி ரூபா செலவில் கடல் நீரைக் குடிதண்ணீராக்கும் திட்டம் தொடர்பான ஆய்வுப்பணிகள் உடனடியாக ஆரம்பமாகும் என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்தார்.

டில்லியில் திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் பேசும்போது இத்தகவலைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

இலவச வர்ணத் தொலைக்காட்சி வழங்கும் திட்டம், நீண்டகாலத் திட்டம். செப்ரெம்பரில் அண்ணா பெரியார் பிறந்த நாளையொட்டி முதல் கட்டமாக, அதைத் தொடங்குகிறோம். சட்டசபையில் அறிவித்தபடி, பேரவையில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்கள், பிரதிநிதிகள் குழு மூலம் வாங்கப்படும் தொலைக்காட்சிகள் அதைத் தொடர்ந்து தயாரிக்கப்படும் தொலைக்காட்சிகள் குறித்து விவாதித்து முடிவெடுக்கப்படும்.

ஏற்கெனவே அறிவித்தபடி, பொது விநியோகத்திட்டத்தில் கிலோ இரண்டு ரூபாய்க்கு அரிசி வழங்கப்படுகிறது. மத்திய அரசின் நிதியுதவி இல்லாமல் நாங்களே இதை வழங்குகிறோம் என்றார் கருணாநிதி.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன் ஆகியோரைச் சந்தித்த கருணாநிதி, குடியரசுத் தலைவர் அப்துல் கலாமை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார். அப்போது கருணாநிதிக்கு கலாம் வாழ்த்துத் தெரிவித்தார். நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்த அவர்கள் இலக்கியம் தொடர்பாகவும் ஆர்வமுடன் கலந்துரையாடினர்.

முன்னாள் பிரதமர் வி.பி.சிங், இந்திய கம்யூனிஸ்ட் தலைவர்கள் பரதன், டி.ராஜா, மத்திய அமைச்சர்கள் ப.சிதம்பரம், ஜி.கே. வாசன், லாலு பிரசாத் யாதவ், சுஷில்குமார் ஷிண்டே, முரளி தேவ்ரா, தமிழகப் பிரிவு ஐஏஎஸ் அதிகாரிகள் ஆகியோரையும் முதல்வர் சந்தித்தார்.

சிரம்பரத்தைச் சந்தித்தபோது, தமிழகத்துக்குத் தேவையான நிதியுதவி குறித்து விரிவாகப் பேசியிருப்பதாகவும் பிரதமர் மற்றும் சோனியா காந்தியுடனும் பேசிருப்பதாகவும் கருணாநிதி தெரிவித்தார்.

# இரண்டு மகன்களைக் கடற்படை கொன்றுவிட்டதால் தமிழகம் வந்தேன்

### தனுஷ்கோடியில் இலங்கைப் பெண் தெரிவிப்பு

இராமேஸ்வரம்,ஜூன்7

இரண்டு மகன்களை இலங்கைக் கடற்படையினர் சுட்டுக்கொன்றதால் மகள், மருமகனுடன் அகதியாக வந்தேன் என்று தனுஷ்கோடிக்கு வந்து சேர்ந்த இலங்கைத் தமிழ்ப் பெண் கூறினார்.

இலங்கை பேசாலையில் இருந்த 16 குடும்பங்களைச் சேர்ந்த அகதிகள் மூன்று படகில் தனுஷ்கோடி அரிச்சல் முனையில் வந்திறங்கினர். நேற்றுமுன்தினம் தனுஷ்கோடி பொலீஸ் இன்ஸ்பெக்டர் தங்கவேல் விசாரணைக்குப் பின் மண்டபம் முகாம் அனுப்பிவைத்தார். அகதி பெண் ராசமான் (வயது 51) கூறியதாவது:-

திருகோணமலையில் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற என் மகன்மார் ஜெகதீசன் (வயது 25), கணேசமூர்த்தி (வயது 21) இருவரையும் இலங்கைக் கடற்படையினர் சுட்டுக்கொன்றுவிட்டனர். கணவரும் இறந்துவிட்டதால் கடைசி மகள் வேணுகா (வயது 23) மற்றும் மருமகனுடன் வசித்துவந்தேன். இலங்கை இராணுவம் மற்றும் பொலீஸார் விசாரணை என்ற பெயரில் அடிக்கடி வீட்டிற்கு வந்து துன்புறுத்துகின்றனர். தற்போது அங்கிருந்து எமது மகளின் வாழ்க்கையையும் பறிகொடுத்துவிடக்கூடாது என முடிவு செய்து குடும்பத்துடன் அகதிகளாக இங்கு வந்துவிட்டோம் - என்றார்.


## ஈரானுக்கெதிரான சில தடைகளை அமெரிக்கா நீக்கும்

வியன்னா,ஜூன்7

ஈரானுக்கு எதிராக விதித்துள்ள சில வர்த்தகத் தடைகளை முழுமையாக நீக்கத் தயார் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

செறிவூட்டிய யுரேனியம் தயாரிப்பதை ஈரான் கைவிட்டால் உடனடியாக, வர்த்தகத் தடைகளை நீக்குவதற்கான ஒப்பந்தத்தைக் கொண்டுவர அமெரிக்கா தயாராக உள்ளதாக மேற்கத்திய நாட்டுத் தூதுவர் ஒருவர் வியன்னாவில் தெரிவித்தார்.

இந்தத் தடைகளை அமெரிக்கா விலக்கிக் கொண்டால் ஈரான் தம்வசமுள்ள பழைய விமானங்களை மாற்றிக்கொள்ளவும் விவசாயத் தொழில்நுட்பங்களைப் பெறவும் வழி கிடைக்கும்.





அமெரிக்கப் [illegible] விபத்தொன்றைத் தொடர்ந்து வீதிகளில் ஆர்ப்பாட்டம் செய்த ஆப்கானியர்கள் பலர் பொலிஸாரால் [illegible]ப்பட்டனர். மக்கள் ஆர்ப்பாட்டம் செய்வதையும் பொலீஸார் ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர் !

நிகழும் மங்களகரமான விய வருசம் வைகாசி மாதம் 25ம் நாள் (08.06.2006) வியாழக்கிழமை காலை 10.40 மணி முதல் 12.10 மணிவரையுள்ள சுவாதி நட்சத்திரமும் சிங்கலக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புதல்வன் திருநிறை செல்வன் **சிவமோகன்** அவர்களுக்கும்



எமது சிரேஷ்ட புதல்வி திருநிறை செல்வி **கிருபவதனி** அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு அருள்மிகு தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான திருமண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு திருமதி.சிவானந்தம் பார்வதிதேவி<br>"சிவபதி"<br>பன்னாலை, தெல்லிப்பளை.<br>நெடியகாடு<br>கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

-தங்கள் நல்வரவை நாடும்-

திருமதி பூமணி திருக்குமாரன்<br>வவுணாவத்தை, துர்க்காபுரம்,<br>தெல்லிப்பளை.<br>49/38 கோவில் வீதி<br>குருமன்காடு, வவுனியா.

(இருவீட்டார் அழைப்பு)



# Beauty Care



* Hair Cuts
* Hair Tints
* Hair Styles
* Hair Highlights
* Hair Perms
* Hair Straightening
* Hair Ironing



* Facials
* Face Bleaching
* Face Threading
* Eye Brow Plucking
* Waxing
* Manicure & Pedicure
* Bridal Dressing

No. 174, Kannathiddy Road,<br>Jaffna.<br>Tel: 077-9788772, 021 222 6018



# பூப்புனித நீராட்டு விழா அழைப்பு



அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விய வருடம் வைகாசி மாதம் 24ஆம் நாள் (07.06.2006) புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் 10 மணிவரையுள்ள சித்திரை நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில்

எமது ஏகபுத்திரி திருநிறைசெல்வி

**கலைவாணி**

அவர்களுக்கு இராஜமாணிக்கம் கல்யாண மண்டபத்தில் மஞ்சள் நீராட்டுவிழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி.49564)(26.19.14)

வீடியோ கலாமினி,<br>அச்சுவேலி.<br>077 3053080

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:<br>திரு.திருமதி மா.சிவமூர்த்தி - மஞ்சுளா<br>ரஜனி - குடும்பத்தினர்.

குறிப்பு:-<br>தவிர்க்கமுடியாத காரணங்களினால் அழைப்புக் கிடைக்காதவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


## முத்திரை இடும் பணி

வடமராட்சி.ஜூன்7

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள், சந்தைகளில் பயன்படுத்தப்படும் நிறுத்தல், அளவைக் கருவிகள் பரிசீலனை செய்யப்பட்டு முத்திரையிடும் பணி நாளை வியாழக்கிழமையும் மறுதினமும் திங்கட்கிழமையும் நடைபெறும்.

பிரதேச சபையின் மந்திகையில் உள்ள பொது நூல் நிலையத்தில் வைத்து யாழ்.மாவட்ட அளவைகள் பரிசோதகரால் முத்திரையிடும்பணி மேற்கொள்ளப்படும்.

(173)


## யாழ்ப்பாணம் மாநகரசபை
### வீதி வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் (திருத்தம்)

04-06-2006, 05-06-2006 ஆம் திகதிகளில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி விளம்பரத்தில், பின்வரும் வீதிகளுக்குரிய மீளளிக்கப்பட வேண்டிய வைப்புத் தொகைகள் தவறுதலாக காட்டப்பட்டுள்ளன. அவற்றிற்குப் பதிலாகத் திருத்தம் செய்யப்படவேண்டிய தொகைகள் கீழ்க்காணும் அட்டவணையில் உள்ளன.

### விளம்பரம் பிரசுரித்தல்

| இல. | வீதியின்பெயர் | மீளளிக்கப்படவேண்டிய திருத்தம் செய்யப்பட்ட சரியான வைப்புத்தொகை ரூபா | தவறுதலாகப் பிரசுரிக்கப்பட்டது ரூபா |
|---|---|---|---|
| 1. | 5, ஆஸ்பத்திரி வீதி | 120,000.00 | 12,000.00 |
| 2. | 11, முஸ்லிம் பாடசாலை வீதி | 84,000.00 | 2,000.00 |

சிரமங்களுக்காக வருந்துகின்றோம்.

சீ.வீ.கந்தையா சிவஞானம்<br>மாநகர ஆணையாளர்,<br>யாழ்ப்பாணம்.

05.06.2006. (சி.49560)(26.19.14)



## Hatton National Bank
### ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடிக் கிளைகளில் 31-03-2005 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத / காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளர்களின் அடகுப் பொருள்கள் 17-06-2006 சனிக்கிழமை அன்று இல. 212, 214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கிளையில் ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

உங்களின் பெறுமதிமிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால் கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூ. 500) செலுத்தி காலாவதித் திகதியை மேலும் ஒரு வருடத்திற்கு நீடித்து பொருள்கள் ஏலத்தில் விற்பனையாவதைத் தவிர்த்துக்கொள்ளவும்.

-முகாமையாளர்.

(சி.49562)(26.19.14)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### பரீட்சைகள்

*முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை -2005*

**கலைப்பீடம்**

*முதலாம் வருட, இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2005*

**இராமநாதன் நுண்கலைக்கழகம்**

இராமநாதன் நுண்கலைக்கழக முதலாம் வருட, இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு அறிமுறைப் பரீட்சை 15-06-2006 அன்று ஆரம்பமாகும். செய்முறைப் பரீட்சைகள் தொடர்பாக மாணவர்கள் தத்தமது துறைத்தலைவர்களைத் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கலைப்பீட மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழக முதலாம் வருட மாணவர்களுக்கான அடிப்படை விஞ்ஞானம் மற்றும் கணனி அறிவு பரீட்சைகள் 20-06-2006 அன்று நடைபெறும்.

கலைப்பீட மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழக இரண்டாம் வருட மாணவர்களுக்கான அடிப்படை விஞ்ஞான (முதலாம் வருடத்தில் நடைபெறத் தவறிய) பரீட்சை 09-06-2006 அன்று நடைபெறும்.

பரீட்சை அட்டவணைகளை கலைப்பீட விளம்பரப்பலகைகளில் பார்வையிடலாம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,<br>யாழ்ப்பாணம். (சி/49566)(26.19.14)

-பதிவாளர்.<br>06-06-2006


## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம். ஜூன் 7

மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்க செயலகத்தின் பிரதேச ரீதியான பயிற்சிப் பட்டறை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இடம்பெறும்.

யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் க. கேதீஸ்வரன் இதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார்.

உலக உணவுத் திட்டத்தின் வேலைக்கான உணவு, பயிற்சிக்கான உணவு ஆகியன தொடர்பாக காலை 9 மணிமுதல் நண்பகல் ஒரு மணிவரை பயிற்சிப்பட்டறை இடம்பெறும்.

(185)

## யுனிசெவ் வெற்றிடங்கள்

வட்டக்கச்சி,ஜூன்7

யுனிசெவ் நிறுவனத்தில் உள்ள வெற்றிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படவுள்ளன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் ஆகிய வலயங்களிலுள்ள வெற்றிடங்களே இவ்வாறு நிரப்பப்படவுள்ளன.

நிதி உதவியாளர், தொழில் நுட்ப உத்தியோகத்தர் ஆகிய பதவிகளுக்கு உள்ள வெற்றிடங்களுக்கு தகைமையுடையவர்கள் உரிய ஆவணங்களுடன் முல்லைத்தீவு, துணுக்காய் வலயக்கல்வி அலுவலகங்களுக்கு இன்று முற்பகல் 10 மணிக்கும் -

கிளிநொச்சி வலயத்தைச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் 13 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கும் கிளிநொச்சி வலயத்திற்கு சமுகம் தருமாறும் கேட்கப்பட்டுள்ளது.

(405)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்<br>**மனோன்மணி பழனியாண்டி**

பிறப்பு 18-07-1934 இறப்பு 08-05-2006



எமது அலுவலக முகாமைத்துவ உதவியாளராக் கடமையாற்றும் **திரு.ப.விமலதாஸ்** அவர்களின் தாய் அமரர் மனோன்மணி பழனியாண்டி அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

பிரதம பொறியியலாளர், நிறைவேற்றுப் பொறியியலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

*கட்டடத் திணைக்களம் (மா), கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.*

*(50976)(32.19.14.26)*


## விவசாயக் குழுக் கூட்டம்

வலி.தென்மேற்கு,ஜூன்7

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச விவசாயக் குழுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்திற்கான அறிவித்தல் இப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சகல விவசாய சம்மேளனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(135)


## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 25 - 07 - 1981



மறைவு 28 - 04 - 2006

**அமரர் மரியப் பெர்ணான்டோ சுதாகரன் (பொக்கி)**

பாசக்கரம் ஒன்று எங்கு சென்றது<br>நேசக் கரங்கள் உம்மைத்தேடி நிற்கின்றன<br>வாசமலராய் மலர்ந்த மலரே - சுதா<br>வாசம் இழந்து வாடியது ஏனோ!

*இன்று (07-06-2006) புதன்கிழமை காலை 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.*

ஊரெழு மேற்கு,<br>சுன்னாகம். (50923)(26.19.14)

-மாமன்மார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் கவனத்துக்கு

வயாவிளான் குட்டியப்புலம் அ.த.க. பாடசாலையில் கல்வி கற்கும் தரம் ஒன்று தொடக்கம் 11 வரையான மாணவர்களையும் கற்பிக்கும் ஆசிரியர்களையும் இன்று புதன்கிழமை காலை பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு பாடசாலையின் அதிபர் எஸ்.கந்தசாமி கேட்டுள்ளார். (204)

## பாராட்டுகிறோம்



எமது நிலைய உறுப்பினரும் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் தலைவருமான

**லயன் எஸ். சிவபாலசுப்பிரமணியம்**

306பி1 லயன்ஸ் மாவட்டத்தின் அதிசிறந்த கழகத்தலைவராகவும் அவரின் கழகம் அதி சிறந்த கழகமாகவும் தெரிவுசெய்யப்பட்டமைக்காகப் பாராட்டுகிறோம்.

(50928) (18-11-14)

நாவலர் சனசமூக நிலையம்,
மாதகல்.

## ஜயோதா

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6657191 முதல் 6667078 வரை. சீட்டிழுப்பு இல. 242 திகதி 05-06-2006

வெற்றி எண்கள்

**6 2 3 2 0 1** சுப்பர் எண் **24**

ஜக்பொட் பரிசு ரூ. **10,908,700/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 10,908,700/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 0 | 1,000,000/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/= | 450,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 88 | 5,000/= | 440,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 870 | 500/= | 435,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8652 | 50/= | 432,600/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 85787 | 10/= | 857,870/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 08 | 5,000/= | 40,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 88 | 1,000/= | 88,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 866 | 100/= | 86,600/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8583 | 20/= | 171,660/= |
| | | மொத்தம் ரூ. | 3,001,730/= |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 3,604,330/-

ரூ. 75,325/- பெறுமதியான டீ.ரி மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| திருகோணமலை | 6660296-0-29 |
| மாத்தறை | 6658355-8-75 |
| மாத்தளை | 6663618-8-80 |
| கொழும்பு | 6666098-1-50 |
| கம்பஹா | 6661717-2-01 |
| களுத்தறை | 6666177-6-26 |
| மொணராகல | 6664854-4-63 |
| அம்பாந்தோட்டை | 6659780-5-76 |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 11,149,400/-

தொடர் இல. 7569644 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 ஜூன் 08 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எம்முடன் 19 - 05 - 1928



இறைவனடியில் 08 - 05 - 2006

**திருமதி கற்பகம் செல்வநாயகம்**

திதி: 07-06-2006

எம் இதயவறைக்குள் இரண்டறக்கலந்தவளே - எம்
பக்கத்துணையாகப் பரிவுடன் இருந்தவளே - நாம்
புலம்புகின்றோம் புவிமீது தனிமையிலே
மறுபிறப்பு உண்டென்றால் மறுபடியும் வநதிடம்மா!
நோயென்று படுத்திருந்து நோக எம்மை வைக்காமல்
சமைத்தெமக்கு வைத்துவிட்டுச் சாப்பிடாமல் - நீ
கடைசி வரையும் கடமைகள் பல புரிந்து
கடமைக்கு வைக்காமல் காற்றோடு கலந்ததேனோ?

மணியகாரன் லேன்,
கொக்குவில்.
(50929) (11-18-14)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## நாதன்ஸ் சினிமா — யாழ்ப்பாணம்

மனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம் பீட்டர் ஜக்சனின்

**கிங் - கொங் King Kong**

தங்கத் தமிழ் மொழியில்
(பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை)
காட்சி நேரம் : 10.30, 2.30

## ராஜா — யாழ்ப்பாணம்

பரத், பத்மபிரியா, ஆர்யா நடித்த

**பட்டியல்**

புதிய வெளியீடு
காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்

## விற்பனைக்கு

எமது சங்கத்தில் வெற்று உரப்பை, வெற்றுச்சாக்கு என்பன விற்பனைக்குண்டு .தேவையானவர்கள் அலுவலக நேரத்தில் பார்வையிட்டு 20.06.2006 ஆம் திகதிக்குப் பிந்தாது மூடிய கூறு விலையைச் சமர்ப்பிக்கவும்.

வெற்றுச் சாக்கு - 566
வெற்று உரப்பை - 9035

கூறுவிலை சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்கமேல்மூலையில் வெற்றுச் சாக்கு , வெற்று உரப்பைக்கான கூறு விலை எனக்குறிப்பிடப்பட வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ-து)
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

(சி-49569) (18-11-14)

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22-11-1954 — மறைவு 18-05-1997

**அமரர் செல்லத்துரை மனோரஞ்சன்**

எல்லாம் நிறைந்தே எவர் பொருளும்
விரும்பார்
நல்ல மனம் பெற்று வருவார் யார்க்கும் -
இல்லை
ஒருபொருள் எண்ணாது வாரிக்கொடுத்துத்
திருப்தியோடு
வாழ்ந்த நீர், மறைந்து ஒன்பது
ஆண்டுகள் ஆனதே.

இந்நாளில் அன்னாரின் தந்தை அமரர் சுப்பையா செல்லத்துரை அவர்களின் ஆறாம் மாத மறைவுநாளையும் நினைவு கூருகிறோம்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.
(50933)(11-18-14)

-குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### முத்துலிங்கம் தயானந்தன் (கனடா)



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துலிங்கம் தயானந்தன் 04-06-2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துலிங்கம் திருமதி பூரணம் முத்துலிங்கம் (கனடா) தம்பதியரின் இளைய மகனும் திருமதி சாந்தினியின் அன்புக் கணவரும் கர்ஸன், வர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிர்மலராணி புலேந்திரன், புஸ்பராணி சற்குணநாதன் (கனடா), சுவர்ணராணி சிறிகுமரன் (கனடா), பிரபானந்தன் (கனடா), நித்தியாநந்தன் (கனடா) ஆகியோரின் இளைய சகோதரனும், புலேந்திரன் (வி.எம்.கே.ஜீவலர்ஸ், சாவகச்சேரி), சற்குணநாதன் (கனடா), சிறிகுமரன் (கனடா), சாந்தா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் மாதங்கி, பிரசாந், கோகுலராஜன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08-06-2006) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கனடாவில் இடம்பெறும்.

*ரொரன்டோ,*
*கனடா.*
*001 416 6151529*
(50934)(18-11-14)

தகவல்:
வி.எம்.கே.குடும்பம்,
டச்சுவீதி,
சாவகச்சேரி.

### திருமதி நகுலேஸ்வரன் தங்கேஸ்வரி

தொல்புரத்தினைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலேஸ்வரன் தங்கேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியை, இணுவில் மத்திய கல்லூரி) அவர்கள் நேற்று (06.06.2006) செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் இறைபதமடைந்தார்.

அன்னார் நகுலேஸ்வரன் (யா/சுதுமலை வடக்கு த.க.வித்தியாலயம்) அவர்களின் மனைவியும் சிவதீபன், நிரோஷன், லோகப்பிரதாப் ஆகியோரின் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*இணுவில்.* (50934)(18-11-14)

தகவல்:
த.நகுலேஸ்வரன் (கணவர்).

### செல்லையா தனபாலன்

(ஓய்வுபெற்ற Forman - C.T.B.)



கொட்டடி, சிவன்பண்ணை வீதியைப் பிறப்பிடமாகவும் நீராவியடி,புகையிரத வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தனபாலன் 06.06.2006 இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் செல்லையா- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் செ.சபாரத்தினம் (ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்), காலஞ்சென்ற செ.தியாகராஜா (மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர்), காலஞ்சென்ற வே. சிந்தாமணி , செ.சோமாஸ்கந்தன் (விமானப்படை உத்தியோகத்தர் கட்டுநாயக்க), காலஞ்சென்ற செ.குஞ்சிதபாதம்(பொலீஸ் உத்தியோகத்தர்), செ.தில்லைநடராஜா (பொலீஸ் உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் வேலுப்பிள்ளை நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும் சியாமளா தேவி, சதானந்தன், த.மஞ்சுளாதேவி(உதவிப் பிரதேச செயலாளர், உடுவில் பிரதேச செயலகம்), த.பிரியலக்ஷ்மி( யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியை), த.திருக்குமரன் (லண்டன்), த.தேவகி ஆகியோரின் அன்புத் தந்தையும் குமாரசாமி சதானந்தனின் (நல்லூர் சரஸ்வதி புத்தகசாலை உரிமையாளர்) அன்பு மாமனும் ச.சசிகாந், ச.பங்கஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற ந.புவனேஸ்வரி, காலஞ்சென்ற து.பராசக்தி, சு.சீதாலட்சுமி, மா.பவளேஸ்வரி, க.மங்களேஸ்வரி, வே. விமலநாதன் (மாமா திருநெல்வேலிச் சந்தை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(07.06.2006)புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*7/2, பிறவுண் வீதி,*
*முதலாம் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*
(50931)(18-11-14)

தகவல்:
மனைவி, மருமகன், பிள்ளைகள்,
மைத்துனர்,பேரப்பிள்ளைகள்.

## முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

# Computer Hardware Engineering Course

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதளைப் பெற

உங்கள் கணனிகளை நீங்களே அமைத்துக்கொள்வதற்கான 100% பயிற்சி நெறி

◇Assembling ◇Upgrading ◇Troubleshooting ◇Fault Finding ◇Repairing ◇Servicing ◇Software Installation ◇Configuring ◇Introduction to Networking

**Course Contents**

- கணனி தொடர்பான அறிமுகம்
- Operating System - Windows XP & DOS
- Internet & e-mail
- கம்பியூட்டரின் பாகங்களும் அவற்றின் விளக்கங்களும்
- Mother Board, Processor, Ram தொடர்பான விரிவான விளக்கம்
- கம்பியூட்டரை அசெம்பிள் செய்தல்
- அசெம்பிளிங் முடிந்தவுடன் என்ன செய்வது என்பது தொடர்பான விளக்கம் (BIOS Setup)
- Hard Disk ஐ முறைப்படுத்தல்
- Software, Operating System இன்ஸ்ரோல் செய்தல்
- கம்பியூட்டரில் ஏற்படும் பழுதுகளை சரிபார்த்தல்.

Course Fee :- 2000/=
Free Study Pack & Drivers CD
வகுப்புக்கள் ஆரம்பம்:-
*12/06/2006:- 08.30*

**Hard ware பயிற்சி**

- கணனிப் பாகங்களை இனம்காணும் முறை
- Assembling
- BIOS Configurations (முறைப்படுத்தல்)
- Hard Disk முறைப்படுத்தல் (Partition & Formatting)
- Network தொடர்பான அறிமுகம்
- Troubule Shooting / Maintenance.

**Software பயிற்சி**

- Operating System நிறுவும் முறை (Windows 98 / Windows XP)
- Software Install செய்யும் முறை
- Driver Installation செய்யும் முறை (Sound Card,Modam,VGA,TV Card,Printer)
- Troubule Shooting (File updating, Copying)

**நன்மைகள்**

- பாடநெறியின் இறுதியில் கம்யூட்டர் காட்வெயார் சம்பந்தமான பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- PI முதல் P4 வரையிலான கம்யூட்டர்களில் பூரண செய்முறைப் பயிற்சி.
- எமது ஆய்வுகூடத்தில் கம்யூட்டரின் உட்தொழினுட்பம் பற்றி பூரண அறிமுகம் செய்வதால் கம்யூட்டர் பற்றிய முன்னறிவு அவசியமில்லை.

**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
*No 15, Sirampiyadi lane , Jaffna.*
Telephone :- 021-2228250 , 0777-222422

விரிவுரையாளரால் வகுப்புக்கள் நடாத்தப்படும்

புதியபிரிவுகள் பின்வரும் தினங்களில் ஆரம்பமாகின்றன.

**09/06/2006, 10/06/2006, 11/06/2006**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிப்பாயிடம் வாக்குமூலம் பதிவு

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி காவலாளி சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக கலட்டி இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய்களிடம் நேற்று வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன.

திருநெல்வேலியைச் சேர்ந்தவரும் தொழில்நுட்பக் கல்லூரியின் காவலாளியுமான தங்கராசா கமலலோஜன் (வயது 37) கடந்த ஏப்ரல்மாதம் 26ஆம் திகதி புதன்கிழமை 8.40 மணியளவில் கடமையில் ஈடுபட்டிருந்த வேளை சுட்டுக்கொலை செய்யப்பட்டிருந்தார்.

மேற்படி கொலை தொடர்பான வழக்கு விசாரணைகள் யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் நேற்று நடைபெற்றன. இதன்போது சம்பவம் இடம்பெற்ற சமயம் தொழில்நுட்பக் கல்லூரிக்குச் சமீபமாகவுள்ள கலட்டி இராணுவமுகாமில் கடமையில் இருந்த படையினர் நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டதுடன், அவர்களின் வாக்குமூலங்களும் பதிவுசெய்யப்பட்டன.

## ராகமவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யடுத்து வத்தளை, மாபொல, வெலிசர, ராகம ஆகிய பகுதிகளில் பொலிஸாரும், இராணுவத்தினரும் கூட்டாக இணைந்து தேடுதல் நடவடிக்கையொன்றை மேற்கொண்டனர்.

இந்தப் பகுதிகளில் வசிக்கும் தமிழர்களிடம் தீவிர விசாரணைகள் நடத்தப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. (க)

## ஒஸ்லோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேற்பளித்தனர்.

அங்கு கூடியிருந்த மக்கள் தமது கைகளில் தமிழீழ தேசியக் கொடிகளையும், நோர்வேயின் தேசியக் கொடிகளையும் கைகளில் ஏந்தியிருந்தனர். புலிகளின் குழுவினருக்கு மலர்க்கொத்துகளை வழங்கி வரவேற்று அழைத்துச் சென்றனர். இதேவேளை - இலங்கை நேரப்படி நேற்று மாலை நோர்வேயின் வெளியுறவுத்துறை அமைச்சில் அந்த நாட்டின் சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சர் எரிக்சொல்ஹெய்மை விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

## யுத்த சூழலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொலைகள், ஆள்கடத்தல்கள், வன்செயல்கள், இராணுவ நெருக்குவாரங்கள் தற்சமயம் தீவிரமாகியுள்ளன. இத்தகைய செயற்பாடுகள் மூலம் அரசு எம்மீது யுத்த சூழலைத் திணித்துவருகின்றது. இதை நோர்வேத் தரப்பிற்கு விரிவாக எடுத்துவிளக்கினோம்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையின்பின் அந்த ஒன்றியத்தில் அங்கம்வகிக்கும் நாடுகள் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடமுடியுமா என்பது குறித்து நோர்வேயுடன் நேற்று ஆராய்ந்துள்ளோம்.

இந்த விவகாரத்தில் எமது தலைமையின் நிலைப்பாட்டை விரிவாக நோர்வேத்தரப்புக்கு எடுத்துவிளக்கியுள்ளோம்.

நாளையும், நாளைமறுதினமும் நடைபெறும் சந்திப்பில் எமது தலைமையின் இறுக்கமான முடிவை - நிலைப்பாட்டை - தெளிவாக முன்வைக்கவிருக்கின்றோம் - இப்படித் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

ஒஸ்லோ பேச்சுக்களை முடித்துக்கொண்டு உயர்மட்டக்குழு சுவிஸ்சென்று அரச அதிகாரிகளுடன் பேச்சு நடத்தவிருக்கின்றது.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்தரப் பரீட்சையின் பரீட்சை நிலையத்திற்குப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்ட பொலீஸார் தமது பொலீஸ் நிலையத்திற்குத் திரும்பும்போது இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தனியாருக்குச் சொந்தமான வாகனமொன்றில் பொலீஸார் திரும்பிக்கொண்டிருந்தனர். அச்சமயம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இரு பொலீஸாரும் அந்த வாகனத்தை ஓட்டிவந்த சிங்கர் நிறுவனத்தின் வவுனியாக் கிளை முகாமையாளரான எம். தங்கராசாவும் உயிரிழந்தனர்.

அவரது 4 வயதுப் பேர்த்தியான சிறுமியும் இரு பொலீஸாரும் காயமடைந்து வவுனியா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## 101 மணிநேர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்று வலியுறுத்தியே தயா இடைக்காடர் இந்த உண்ணாவிரத கவன ஈர்ப்புப் போராட்டத்தை நடத்தினார்.

பிரித்தானிய நாடாளுமன்றக் கட்டடத்தின் முன்பாக இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் பெருமளவிலான ஈழத் தமிழர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதனும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு ஆதரவை வெளிப்படுத்தினார்.

பிரித்தானிய தொழிற்கட்சியின் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் ரொபேட் ஈவன்ஸ் மற்றும் பிரித்தானிய சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் ஆகியோர் தயா இடைக்காடரைச் சந்தித்து உரையாடியுள்ளனர். 101 மணித்தியாலங்களின் பின்னர் நேற்று இவரது போராட்டம் நிறைவுக்கு வந்தது. தமது இப் போராட்டம் வெற்றிகரமாக இடம்பெற்றதாகவும் இதனையிட்டு தாம் நிறைவடைகிறார் என்றும் தயா இடைக்காடர் தெரிவித்தார்.(க)

## காணாமல்போன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டவராவார்.

இவர் கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலய பூசையை முடித்துக்கொண்டு திரும்பியவேளையே காணாமற்போயிருந்தார் என அவரது உறவினர்களால் அச்சம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நேற்றுமாலை மண் ஏற்றுவதற்காக கோப்பாய் - கைதடி வீதிப் பகுதியில், கோப்பாய்ப் பாலத்திற்கு அண்மையில் உள்ள மண்மேட்டுப் பகுதிக்குச் சென்றவர்களே அங்கு சடலம் ஒன்று இருப்பதைக் கண்டு தகவல் தெரிவித்துள்ளனர்.

அவர்களால் கொடுக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கிராம சேவகர் சகிதம் அப்பகுதிக்குச் சென்ற பூசகரின் உறவினர்கள் சடலத்தை இனங்காட்டினர். சடலத்தின் தலைப் பகுதியில் காயம் காணப்படுவதாகவும் - சடத்தில் காணப்பட்ட வேட்டி, சால்வையில் இரத்தக் கறைகள் காணப்படுவதாகவும் - உறவினர்கள் தெரிவித்தனர்.

மிகவும் உருக்குலைந்த நிலையில் காணப்பட்ட இச் சடலத்தைப் பார்வையிட்ட சாவகச்சேரி பதில் நீதிவான் எஸ். கந்தசாமி சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு சாவகச்சேரிப் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

நேற்றுமாலை சடலம் பொலீஸாரால் யாழ். போதனா வைத் தியசாலையில் ஒப்படைக்கப் பட்டது. (12-75)

## புலிகள் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டி.கே.பி. திஸநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்றைய சம்பவம் தொடர்பில் 'ரொய்ட்டர்' செய்தி நிறுவனத்திற்குக் கருத்து வெளியிட்ட கடற்படைப் பேச்சாளர், இந்தச் சம்பவத்திற்கு புலிகள்தான் காரணமென்று நாங்கள் கருதுகிறோம். ஏனெனில், இவ்வாறான தாக்குதல்களை அவர்கள்தான் நடத்தி வருகிறார்கள். சிவிலியன்களை இலக்கு வைத்தா இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதென்று தெரியவில்லை. ஆனால், தாக்குதல் நடைபெற்ற இடங்களில் சிவிலியன்கள் நடமாட்டமே அதிகம் என்று கூறினார். (க)


**இணுவில் பொருளியற் கல்லூரி**
கே.கே.எஸ். றோட், இணுவில்.

**பொருளியல்**
வடமராட்சியின் மிக பிரபல்ஜம் பெற்ற ஆசிரியர்
**M.C. சுதாகரன் B.com (HONS)**

**A/L 2007** பணம், வங்கி, பொது விலை மட்டம்
பிரிவு 2 ஆரம்பம் - 08.06.2006 வியாழன் 3 pm அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

**A/L 2008** சனி - ஞாயிறு புதிய பிரிவு நடைபெறுகின்றன.


## விழிநீர் அருவி சொரிய

எமது பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலர் செல்வி த. மஞ்சுளாதேவி அவர்களின் அன்புத் தந்தை

**செல்லையா தனபாலன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், வலி.தெற்கு, உடுவில்

## 41 ஆம் நாள் நினைவில்



மரியபேர்ணாண்டோ சுதாகரன் (போக்கி)

அன்பனின் அன்பு முகம் - இன்று
அரக்கனின் அழிப்பில் அழிந்து - போனதுவே - இவ்
அன்பு முகத்தை இனி நாம் எப்போது
காண்போம் இனி.

ஊரெழு மேற்கு, சுன்னாகம். — முகுந்தன், தரன் (நண்பர்கள்)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி இராசமணி (கோண்டாவில்)



கோண்டாவிலை வதிவிடமாகக் கொண்ட சின்னத்தம்பி இராசமணி அவர்கள் 03-06-2006 சனிக்கிழமை இரவு 10.30 மணியளவில் இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (08-06-2006) வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**பிள்ளைகள்.**
T.P.: 0776130382
0776170806

**மிஷன்பாடசாலை வீதி, கோண்டாவில்.**

### வைத்தீஸ்வர ஐயா வெங்கடகிருஷ்ணசர்மா (குட்டி ஐயா)

*(கைதடி வீரகத்தி ஆலய அர்ச்சகர்)*



கோப்பாய் மத்தியைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வர ஐயர் வெங்கடகிருஷ்ணசர்மா (குட்டி ஐயா) அவர்கள் 26.05.2006 அன்று அகால மரணமானார்.

அன்னார் (அமரர்) பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வர ஐயர் - மீனாட்சியம்மா ஆகியோரின் மகனும் சிவம்பிரம்மஸ்ரீ பாஸ்கரக் குருக்களின் சகோதரனும் வடிவாம்பிகையின் மைத்துனரும், பிரம்மஸ்ரீ சண்முகரட்ணசர்மா (ஓய்வுபெற் ஆசிரியர்) - நாகலட்சுமி அம்மாவின் அன்பு மருமகனும் மாலினியின் அன்புக் கணவரும் ரவிச்சந்திரன் (பிரான்ஸ்), பிரேமச்சந்திரக் குருக்கள் உமா (கோப்பாய்), நிர்மலா (இந்தியா), கிருஜா (சுவிஸ்), ஜெகதீஸ்வரசர்மா ரோகினி (சிலாபம்) ஆகியோரின் மைத்துனரும் ஜீவிகா (பழைய மாணவி - கிறிஸ்தவக் கல்லூரி, கோப்பாய்), துளஷ்யா, தனுஜா (நாவலர் தமிழ் வித்தியாலயம், கோப்பாய்), கம்ஷியா (வெள்ளெருவைப் பிள்ளையார் பாலர் பாடசாலை, கோப்பாய்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

இன்று (07.06.2006) புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, கோப்பாய் இந்து மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
**மனைவி, பிள்ளைகள். (குடும்பத்தார்)**

**கோப்பாய் மத்தி, கோப்பாய்.**

## அருள்மிகு கௌரி உடனுறை திருக்கேதீச்சர நாதர் திருக்கோயில்

## திருக்கொடியேற்றப்பெருவிழா (மஹோற்சவம்)

**விய ஆண்டு வைகாசித் திங்கள் 17 ஆம் நாள் (31.05.2006)**

*பேரன்புடையீர்!*

*மங்களகரமான விய ஆண்டு வைகாசித் திங்கள் புதன்கிழமை 17ஆம் நாள் 31.05.2006 அன்று கௌரியுடனுறை திருக்கேதீச்சர பெருமானுக்கு திருக்கொடியேற்ற நிகழ்வு ஆரம்பமாகி 01.06.2006 முதல் நாளும் காலை 4மணி முதல் திருமுழுக்கு (அபிசேஷகம்) காலைப் பூசை, கொடித் தம்பப் பூசை, வசந்த மண்டபப் பூசை அலங்காரப் பூசைகள் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து பஞ்ச மூர்த்திகள் வீதி உலாகாட்சியும் இரவு 9 மணிக்கு விழா நிறைவு பெறுகிறது.*

*வைகாசி 25 ஆம் நாள் வியாழக்கிழமை 08.06.2006 ஐந்து திருத்தேர்களின் திருவீதி உலாவும் 26 ஆம் நாள் வெள்ளிக்கிழமை 9.06.2006 காலை தூய பாலாவித் திருக்குளத்தில் தீர்த்தம் கொடுத்தலும் 27 ஆம் நாள் சனிக்கிழமை 10.06.2006 இல் மௌனத் திருவிழாவும் 28ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 11.06.2006 இரவு சண்டேஸ்வரர் திருவிழாவும் சிறப்புடன் நிகழவுள்ளன.*

*அன்பர்களே, அடியார்களே, அருள்மிகு திருக்கேதீச்சர பெருமானின் திருக்கோயில் வானளாவ வகைசெய்வது உள்ளூர், புலம்பெயர்ந்த சைவப் பெருமக்களின் சிந்தனையிலும் செயலிலும் உள்ளது. மறவாது செயற்பட வேண்டுகிறோம்.*

**- திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச்சபை.**


**LOGIC**
A/L 2008
நடைபெறுகிறது
Sat. Sun.
புதன் 9 am
வியாழன் 7 am
By.P.கமல்
**UNIVERSAL**


## கோண்டாவில் கிழக்கு திருவருள்மிகு ஸ்ரீ ஞானப்பழனி முருகன் தேவஸ்தானம்

## சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா விஞ்ஞாபனம்





அடியார்களே!

ஆறுமுகம் சிற்பாலயத்தைச் சேர்ந்த சிற்பச் சக்கரவர்த்தி ஸ்தபதி ஆறுமுகம் ஜீவரட்ணம் ஆச்சாரியார் அவர்களின் புதல்வர் ஜீவரட்ணம் ஜெயப்பிரகாஸ் அவர்களும், அவர்தம் குழுவினரும் உருவாக்கியுள்ள இச்சித்திரத்தேர் இன்று (07.06.2006) புதன்கிழமை பி.ப. 2.30 மணிக்கு வெள்ளோட்டமும் நாளை 08.06.2006 காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் நடைபெறும்.

நிகழ்ச்சிகள் ஆசியுரை - ✱ கோண்டாவிலைச் சேர்ந்த சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் அவர்கள்
✱ இணுவிலைச் சேர்ந்த செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன்

ஆசாரியார் கௌரவிப்பு - பொன்னாடை போர்த்தல் – ப.அம்பிகைபாகன் (ராசன்) தங்கப்பதக்கம் அணிதல் – சதாசிவம் சிவலிங்கம்

நன்றியுரை - த.கந்தசாமி — நிதியுதவி செய்த அடியவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்

முருகன் அடியார்கள் அனைவரும் வெள்ளோட்ட விழாவில் கலந்துகொண்டு எம்பெருமானின் திருவருள் கடாட்ச்சத்தை பெற்றுய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சு.சதாசிவம் குடும்பத்தினரும், தேர்த்திருப்பணிச் சபையினரும், நிர்வாக சபையினரும், பொதுமக்களும்.

*இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.06.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org